கொடைக்கானலில் இடம் வாங்க விற்க அணுகவும்.
கொடைக்கானல் மற்றும் மேல் மலைப் பகுதிகளில் எஸ்டேட், பல வகை தோட்டங்கள், வீடு கெஸ்ட் ஹவுஸ் விற்க எங்களை அணுகவும்
தொடர்புக்கு:
98426-99466, 78100 - 68421, 94884 - 20449

PRGI.NO.TNTAM/25/A1635

# நீதிகதிர் எக்ஸ்பிரஸ்

NEETHIKATHIR EXPRESS
மறைக்கப்பட்ட செய்திகள் திறக்கப்படும்
காலை நாளிதழ்

நீதி கதிர் எக்ஸ்பிரஸ் சென்னை அலுவலகம்.
No.19\10 1st Floor
F1 ,7th Street, Nehru Colony,
Nanganallur, Chennai - 600061
Cell: 7810068421,9488420449
neethiPress@ gmail.com

மலர்: 01 | இதழ்: 141 | 26-11-2025 | புதன் | பக்கம்- 8 | விலை- ரூ.5 | திருச்சி
Volum 01 | Issue: 141 | 26-11-2025 | Wednesday | Pages - 8 | Price- Rs. 5 | Trichy

## அயோத்தி ராமர் கோயிலில் காவிக்கொடி ஏற்றிய பிரதமர் மோடி

அயோத்தி: நவ.26–

அயோத்தியில் பிரம்மாண்டமாகக் கட்டப்பட்டுள்ள ஸ்ரீ ராமர் கோயிலின் கோபுர உச்சியில் பிரதமர் நரேந்திர மோடியும், ஆர்எஸ்எஸ் தலைவர் மோகன் பாகவத்தும் இணைந்து காவிக்கொடியை ஏற்றினர்.



அயோத்தியில் உள்ள ஸ்ரீ ராமர் கோயில் கோபுர உச்சியில் கொடியேற்றும் திருவிழா நேற்று நடைபெற்றது. இதற்காக, பிரதமர் நரேந்திர மோடி நேற்று காலை அயோத்தி சென்றார். அவரை உத்தரப் பிரதேச ஆளுநர் ஆனந்தி பென், முதல்வர் யோகி ஆதித்யாநாத் உள்ளிட்டோர் வரவேற்றனர்.

அயோத்தி ராமர் கோயிலில் புதிதாக கட்டப்பட்டுள்ள மஹரிஷி வசிஷ்டர், மஹரிஷி விஸ்வாமித்திரர், மஹரிஷி அகத்தியர், மஹரிஷி வால்மீகி, தேவி அஹில்யா, நிஷாத்ராஜ் குகன், அன்னை சபரி ஆகியோரின் ஏழு கோயில்களுக்குச் சென்று பிரதமர் தரிசனம் செய்தார். இதைத் தொடர்ந்து, சேஷாவதார் கோயிலுக்கும், அன்னபூர்ணா தேவி கோயிலுக்கும் சென்ற பிரதமர், பின்னர் குழந்தை ராமர் கோயிலுக்குச் சென்று வழிபட்டார். அவருடன், ஆர்எஸ்எஸ் தலைவர் மோகன் பாகவத்தும் இணைந்து வழிபாடு மேற்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து அவர்கள் இருவரும் சேர்ந்து, பத்து அடி உயரமும், இருபது அடி நீளமும் கொண்ட காவிக்கொடியை கோயில் கோபுர உச்சியில் ஏற்றினர். இந்த கொடியில், ராமர் பிறந்த சூரிய குலத்தை குறிக்கும் வகையில் சூரிய சின்னம், மையத்தில் ஓம் மற்றும் மந்தாரை மரம் ஆகியவை பொறிக்கப்பட்டிருந்தன.

வரலாற்று சிறப்பு மிக்க இந்த விழாவை முன்னிட்டு, அயோத்தியில் விரிவான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன. சாலைகள் அனைத்தும் தூய்மை செய்யப்பட்டு, நகரம் காவிக் கொடிகள் மற்றும் தோரணங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது.

பிரதான பால ராமர் கோயிலுடன் சிவன், விநாயகர், அனுமன், சூரியன் உள்ளிட்டோருக்கான துணை கோயில்களும் அலங்கரிக்கப்பட்டிருந்தன. பிரதமரின் வருகையை முன்னிட்டு பலத்த பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தன.




## ஈரோடு மாவட்டத்தில் இன்று சுற்றுப்பயணம் செய்கிறார் முதல்வர் மு.க.ஸ்டாலின்...

### * 605 முடிவுற்ற திட்டப் பணிகளை துவக்கி வைத்து...
### * 1., 84..491 பயனாளிகளுக்கு நல திட்ட உதவிகள் வழங்குகிறார்...
### * தீரன் சின்னமலை நினைவிடத்தில் மரியாதை செய்து.. பொல்லான் மணிமண்டப அரங்கத்தை திறந்து வைக்கிறார்.

ஈரோடு.நவ. 26

ஈரோடு மாவட்டத்தில் தமிழக முதல்வர் மு க ஸ்டாலின் இன்று 26 ஆம் தேதி சுற்றுப்பயணம். மேற்கொள்கிறார். முடிவுற்ற பணிகளை துவக்கி வைத்தும். புதிய பணிகளுக்கு அடிக்கல் நாட்டுகிறார்.



தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் அவர்கள் நேற்று 25ஆம் தேதி கோவை வந்த நிலையில் அங்கு காலை செம்மொழி பூங்காவை திறந்து வைத்தார். அன்று மாலை தொழில் முனைவோர் கூட்டமைப்பின் சார்பில் நடைபெற்ற புரிந்துணர்வு ஒப்பந்தங்கள் மேற்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து இன்று நவம்பர் 26 ஆம் தேதி காலை பல்வேறு நிகழ்ச்சியில் கலந்து கொள்வதற்காக, ஈரோடு விருந்தினர் இல்லத்தில் இருந்து புறப்படும் அவர் காலை 8:30 மணி அளவில், மொடக்குறிச்சி அருகே உள்ள ஜெயராம புரத்தில் சுமார் 6 கோடி ரூபாய் மதிப்பீட்டில் செய்தி துறையின் சார்பில் அமைக்கப்பட்டுள்ள சுதந்திரப் போராட்ட வீரர் பொல்லான் அவர்களின் மணி மண்டப அரங்கத்தினை திறந்து வைக்கிறார்.

தொடர்ந்து அரச்சலூர் அருகே உள்ள ஓடா நிலையில் அமைந்துள்ள சுதந்திரப் போராட்ட மாவீரர் தீரன் சின்னமலை அவர்களின் வெண்கல சிலை அமைப்பதற்கான அடிகளை நாட்டி, தீரன் சின்னமலை மணிமண்டபத்தில் உள்ள அவரது திருஉருவ சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்துகிறார்.

அதன் பின்னர் பல்வேறு இடங்களில் புதியதாக கட்டப்பட்டுள்ள பேரூராட்சிகள் அலுவலகம் மற்றும் அரசு அலுவலகங்களை திறந்து வைக்கிறார்.

பின்னர் காலை சரியாக 11 மணியளவில் சோலார் புதிய பேருந்து நிலைய வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள விழா மேடைக்கு வருகை தரும் அவர், அங்கு முடிவற்ற 605 திட்டப் பணிகளை துவக்கி வைக்கிறார். பின்னர் புதிய திட்டப் பணிகளுக்கு அடிக்கல் நாட்டுகிறார்.

அந்த விழா மேடையில் 1..84..491 பயனாளிகளுக்கு பல்வேறு துறைகளில் சார்பில் நலத்த உதவிகளை வழங்கிய விழா பேருரை ஆற்றுகிறார்.

பின்னர் மாலை சித்தோடு அருகே பால்வளத் தந்தை என்று அழைக்கப்படும் பரமசிவம் அவர்களின் திருவுருவை சிலையை திறந்து. வைக்கிறார்.

அதன் பின்னர் கார் மூலம் கோவை விமான நிலையம் செல்லும் அவர் அங்கிருந்து விமானம் மூலம் சென்னை சென்றடைகிறார்.

தமிழ்நாடு முதலமைச்சர் மு க ஸ்டாலின் கலந்து கொள்ளும் ஈரோடு மாவட்ட நிகழ்ச்சிகளுக்கு, மாவட்ட ஆட்சித் தலைவர் ச. கந்தசாமி தலைமை வைக்கிறார்.

இந்த நிகழ்ச்சியில் தமிழ்நாடு வீட்டு வசதி வாரிய துறை அமைச்சர் சு. முத்துசாமி, மற்றும் பல்வேறு துறைகளின் அமைச்சர்கள், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே இ பிரகாஷ், சட்டமன்ற உறுப்பினர்கள் அந்தியூர் ஏ ஜி வெங்கடாஜலம், ஈரோடு கிழக்கு வி. சி சந்திரகுமார், மேயர், துணை மேயர், மண்டல குழு தலைவர்கள், நகராட்சி தலைவர்கள், அனைத்து பேரூராட்சி தலைவர்கள், மற்றும் அரசு உயர் அதிகாரிகள் கலந்து. கொள்கின்றனர்.

முதலமைச்சர் மு க ஸ்டாலின் ஈரோடு ஈரோடு வருகை தருவதை முன்னிட்டு, பல இடங்களில் போக்குவரத்து மாற்றங்கள் செய்யப்பட்டுள்ளது. மேலும் பல இடங்களில் வேகத் தடைகள் அகற்றப்பட்டுள்ளது.

உயர் போலீஸ் அதிகாரிகளின் தலைமையில் நூற்றுக்கணக்கான போலீசார் பாதுகாப்பு பணியில் ஈடுபட்டுள்ளனர்.




கோவை காந்திபுரம் நஞ்சப்பா சாலையில் ரூ.208.50 கோடி மதிப்பிலான செம்மொழி பூங்காவை பொதுமக்கள் பயன்பாட்டுக்காக முதல்வர் ஸ்டாலின் திறந்து வைத்தார்.இந்த நிகழ்ச்சியில் அமைச்சர்கள் கே என்.நேரு, டி. ஆர்.பி ராஜா, கயல்விழி செல்வராஜ், முன்னாள் அமைச்சர் செந்தில் பாலாஜி, மேயர் கா.ரங்கநாயகி, நகராட்சி நிர்வாகத்துறை முதன்மை செயலாளர் கார்த்திகேயன், நகராட்சி நிர்வாக இயக்குனர் மதுசூதன் ரெட்டி, மாவட்ட ஆட்சியர் பவன் குமார், மாநகராட்சி ஆணையர் சிவகுரு பிரபாகரன், துணை மேயர் வெற்றிச்செல்வன் மற்றும் அரசு அலுவலர்கள் கலந்து கொண்டனர்.



# விஜய் முன்னிலையில் நவ.27ல் தவெகவில் இணைகிறார் செங்கோட்டையன்.



ஈரோடு, நவ. 26–

அதிமுகவில் இருந்து நீக்கப்பட்ட அக்கட்சியின் மூத்த தலைவர்களில் ஒருவரான கே.ஏ.செங்கோட்டையன் வரும் 27ந் தேதி, நடிகர் விஜய் முன்னிலையில் தமிழக வெற்றிக் கழகத்தில் இணைய இருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

எம்ஜிஆர் காலத்தில் இருந்து அதிமுகவில் எம்.எல்.ஏ., அமைச்சராக இருந்தவர் கே.ஏ.செங்கோட்டையன். ஜெயலலிதா முதல்வராக இருந்த போது அதிமுக ஆட்சியில் முக்கிய துறைகளின் அமைச்சராகவும் இருந்தார்.

ஜெயலலிதா மறைவுக்கு பின்னர் ஓபிஎஸ் தர்ம யுத்தத்தின் போது, அடுத்த முதல்வர் யார் என்கிற ரேஸில் கே.ஏ.செங்கோட்டையன் பெயரே முதலில் அடிபட்டது. அதன் பின்னர்தான் அதிமுக எம்.எல்.ஏக்களால் எடப்பாடி பழனிசாமி, முதல்வராக தேர்ந்தெடுக்கப்பட்டார்.

அதிமுக பொதுச் செயலாளர் எடப்பாடி பழனிசாமி தலைமைக்கு எதிராக திடீரென சில மாதங்களுக்கு முன்னர் போர்க்கொடி தூக்கினார் கே.ஏ.செங்கோட்டையன். அதிமுகவில் இருந்து வெளியேற்றப்பட்ட சசிகலா, டிடிவி தினகரன், ஓபிஎஸ் உள்ளிட்டோரை மீண்டும் அதிமுகவில் சேர்க்க வேண்டும் என எடப்பாடி பழனிசாமிக்கு கெடு விதித்தார் செங்கோட்டையன். இதனால் கோபமடைந்த எடப்பாடி பழனிசாமி, செங்கோட்டையனின் கட்சிப் பதவிகளை முதலில் பறித்தார்.

இதன் பின்னர் பசும்பொன் முத்துராமலிங்க தேவர் நினைவிடத்தில் சசிகலா, டிடிவி தினகரன், ஓபிஎஸ் உள்ளிட்டோரை செங்கோட்டையன் சந்தித்து பேசினார். இதனால் அதிமுகவில் இருந்தே செங்கோட்டையனை நீக்கினார் எடப்பாடி பழனிசாமி. மேலும் செங்கோட்டையன் ஆதரவாளர்களையும் கூண்டோடு அதிமுகவில் இருந்து நீக்கினார் இபிஎஸ்.

இந்த நிலையில்தான் நடிகர் விஜய்யின் தமிழக வெற்றிக் கழகத்தில் செங்கோட்டையன் இணைய இருப்பதாக தகவல்கள் வெளியாகி உள்ளன.

கே.ஏ.செங்கோட்டையனின் சகோதரி மகனான முன்னாள் டிஜிபி எம்.ரவி, கடந்த வாரம் நடிகர் விஜய்யை இது தொடர்பாக சந்தித்து பேசியிருந்தார்.

இதனையடுத்து தமது எம்.எல்.ஏ. பதவியை ராஜினாமா செய்யும் செங்கோட்டை யன், விஜய் முன்னிலையில் நவம்பர் 27ந் தேதி தவெகவில் இணைவதாக தகவல்கள் வெளியாகி இருக்கின்றன.

# அரியலூர் மாவட்டத்தில் நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து 194 கோரிக்கை மனுக்கள் பெறப்பட்டது.



அரியலூர் மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில், "மக்கள் குறை தீர்க்கும் நாள் கூட்டம்";; நடைபெற்றது. இக்கூட்டத்தில், முதியோர் உதவித் தொகை, இலவச வீட்டு மனைப்பட்டா, மாற்றுத்திறனாளி உதவித்தொகை, தொழில்கடன், பசுமை வீடு உள்ளிட்ட பல்வேறு கோரிக்கைகள் அடங்கிய 194 மனுக்கள் பொதுமக்களிடமிருந்து பெறப்பட்டு, இம்மனுக்கள் மீது சம்மந்தப்பட்ட துறை அலுவலர்கள் உடனடி நடவடிக்கைகள் மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டது. முன்னதாக மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 02 மாற்றுத்திறன் நபர்களுக்கு பேட்டரியால் இயங்கும் சக்கர நாற்காலியினை மாவட்ட ஆட்சித்தலைவர் இரத்தினசாமி, வழங்கினார்.

இந்நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் .மல்லிகா, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் முனைவர்.சிவராமன், மாவட்ட நிலை அலுவலர்கள் மற்றும் அனைத்துதுறை அரசு அலுவலர்கள் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர்

# திருவண்ணாமலை தீபத்திருவிழாவுக்கு 200 சொகுசு பஸ்கள்

## விரைவு போக்குவரத்து கழக நிர்வாக இயக்குனர் மோகன் அறிக்கை

சென்னை: நவ.26–

கார்த்திகை தீபத் திருவிழாவை முன்னிட்டு, நாகர்கோவில், கோவை, தூத்துக்குடி உட்பட பல்வேறு இடங்களில் இருந்து, திருவண்ணா மலைக்கு, 200 சொகுசு விரைவு பஸ்கள் இயக்கப்பட உள்ளன.

இதுகுறித்து, விரைவு போக்குவரத்து கழக நிர்வாக இயக்குனர் மோகன் வெளியிட்ட அறிக்கை: கார்த்திகை தீபத் திருநாளை முன்னிட்டு, திருவண்ணாமலை சென்று வர வசதியாக, அரசு போக்குவரத்து கழகங்கள் சார்பில் சிறப்பு பஸ்கள் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன.

அரசு விரைவு போக்குவரத்து கழகம் சார்பில் மட்டும், சென்னையில் இருந்து திருவண்ணாமலைக்கு, 160 சொகுசு, 'ஏசி' பஸ்கள், டிச., 3, 4ம் தேதிகளில் இயக்கப்படும்.

இதேபோல, நாகர்கோவில், திருநெல்வேலி, தூத்துக்குடி, செங்கோட்டை, மதுரை மற்றும் கோவையில் இருந்தும், அரசு விரைவு போக்குவரத்து கழகம் சார்பில், சொகுசு மற்றும் படுக்கை வசதி உள்ள, 'ஏசி' சொகுசு பஸ்கள், டிச., 2, 3ம் தேதிகளில் இயக்கப்பட உள்ளன. மொத்தம், 200க்கும் மேற்பட்ட விரைவு பஸ்களை இயக்க ஏற்பாடு செய்யப்பட் டுள்ளது.

பயணியர் www.tnstc.in மற்றும் அதன் செயலி வாயிலாக முன்பதிவு செய்யலாம்.

பஸ் இயக்கம் குறித்து, மதுரை 94450 14426, திருநெல்வேலி 94450 14428, நாகர்கோவில் 94450 14432, தூத்துக்குடி 94450 14430, கோவை 94450 14435, சென்னை 94450 14463, 94450 14424 ஆகிய எண்களில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு அதில் கூறப்பட்டுள்ளது.

இருக்கும் போது
ரத்ததானம்.... இறந்த பின்
கண்தானம் செய்வீர்...

# கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் 28.11.2025 அன்று நடைபெறவுள்ளது

## மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த் தகவல்.

கள்ளக்குறிச்சி நவ 26

கள்ளக்குறிச்சி மாவட்டத்தில் நவம்பர் 2025ம் மாதத்திற்கான விவசாயிகள் குறைதீர்க்கும் நாள் கூட்டம் 28.11.2025 (வெள்ளிக்கிழமை) அன்று முற்பகல் 11.00 மணி முதல் பிற்பகல் 2.00 மணி வரை நடைபெற உள்ளது.



இக்கூட்டத்தில் கள்ளக் குறிச்சி மாவட்டத்தில் உள்ள வேளாண்மை மற்றும் உழவர் நலத்துறை, வேளாண்மை சார்ந்த துறைகளான தோட்டக் கலைத்துறை, வேளாண் விற்பனை மற்றும் வேளாண் வணிகம், வேளாண்மை பொறியியல் துறை, கால்நடை பராமரிப்புத் துறை, கூட்டுறவுத்துறை, வருவாய்த் துறை, ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சி துறை, வங்கியாளர்கள் மற்றும் பிறசார்பு துறை அலுவலர்கள் கலந்து கொண்டு விவசாயிகளின் குறைகள் மற்றும் கோரிக்கைகளுக்கு பதிலளிக்க உள்ளனர்.

எனவே, விவசாயிகள் மற்றும் விவசாய சங்க பிரதிநிதிகள் தங்கள் கோரிக்கைகள் தொடர்பாகவும், தனிநபர் தங்கள் குறைகள் குறதெரிவித்துள்ளார் அளித்து பயன்பெறலாம் என மாவட்ட ஆட்சித்தலைவர் எம்.எஸ்.பிரசாந்த் தெரிவித்துள்ளார்.

# தமிழக கூட்டுறவு வங்கிகளில் நகை கடன் பிரிவில், 1 கிராம் தங்கத்திற்கு வழங்கப்படும் கடன் தொகை ரூ.7,000 ஆக அதிகரிப்பு!!

சென்னை: நவ.26–

கூட்டுறவு வங்கிகளில் நகை கடன் பிரிவில், 1 கிராம் தங்கத்திற்கு வழங்கப்படும் கடன் தொகை, 7,000 ரூபாயாக அதிகரிக்கப்பட்டுள்ளது. தமிழகத்தில் கூட்டுறவு துறையின் கீழ் செயல்படும், மாநில, மாவட்ட தலைமை கூட்டுறவு வங்கிகள், தொடக்க வேளாண் கூட்டுறவு கடன் சங்கங்கள், நகர கூட்டுறவு சங்கங்கள் உள்ளிட்டவற்றில், தங்க நகை அடமானம் பேரில், நகைக்கடன்கள் வழங்கப்பட்டு வருகின்றன. இதனை பெரும்பாலான பொதுமக்கள் முக்கியமாக கிராமப்புறங்களில் உள்ளவர்கள், இந்த கூட்டுறவு வங்கியை நாடுகிறார்கள். கூட்டுறவு வங்கிகளில் நகை கடன் பிரிவில், ஒரு கிராம் தங்கத்துக்கு, 6,000 ரூபாய் வரை கடன் வழங்கப்படுகிறது.

இந்த நிலையில், சர்வதேச நிலவரங்களால் நம் நாட்டில் தங்கம் விலை உயர்ந்துள்ளது. தமிழகத்தில் தங்கம் விலை சவரனுக்கு 92,000 ரூபாயாக உள்ளது. ஒரு கிராம் ரூ.12,000 வரை அதிகரித்து விற்பனையாகி வருகிறது. இதையடுத்து, கூட்டுறவு நிறுவனங்களில் 1 கிராம் தங்கத்திற்கு வழங்கப்படும் கடன் தொகை, 7,000 ரூபாயாக உயர்த்தப்பட்டுள்ளது.கூட்டுறவு வங்கிகள் மற்றும் கூட்டுறவு கடன் சங்கங்களில், நடப்பு நிதியாண்டின் ஏப்., முதல் அக்., வரை, 42 லட்சம் பேருக்கு, 45,000 கோடி ரூபாய் அளவுக்கு நகை கடன்கள் வழங்கப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

# கடலூர் மற்றும் தூத்துக்குடியில் கடல் அரிப்பை தடுக்க ரூ.10 கோடி

சென்னை: நவ.26–

கடலூர், தூத்துக்குடி மாவட்டங்களில், கடல் அரிப்பை தடுக்க, உயிர் கேடயங்கள் உருவாக்கும் பணிக்கு, 10 கோடி ரூபாய் ஒதுக்க, தமிழக அரசு ஒப்புதல் அளித்து உள்ளது.

தமிழகத்தில், 2004ம் ஆண்டு ஆழிப்பேரலை எனப்படும் சுனாமி தாக்கியது. அதன்பின், கடலோர பகுதிகளில், சுற்றுச்சூழல் பாதிப்பு தடுப்பு நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப்பட்டன. சுனாமியின் போது, அலையாத்தி காடுகள் இருந்த பகுதிகளில், பாதிப்பு ஏற்படவில்லை.

மேலும், அலையாத்தி மரங்கள் அதிகம் உள்ள பகுதிகளில், கடல் அரிப்பு தடுக்கப்படுவதும், ஆய்வுகளில் தெரியவந்தது.

இதை கருத்தில் வைத்து , கடலோர பகுதிகளில், அலையாத்தி மரங்கள் வளர்ப்பு பணியில், வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை கூடுதல் கவனம் செலுத்தி வருகிறது. கடலூர் மட்டுமல்லாது, சென்னையில் அடையாறு, எண்ணூர் முகத்துவாரப் பகுதிகள், பழைய மாமல்லபுரம் சாலையில், பகிங்ஹாம் கால்வாய் போன்ற இடங்களில், அலையாத்தி மரங்கள் வளர்ப்பு பணிகளை வனத்துறை முடுக்கி விட்டுள்ளது.

இந்நிலையில், கடலூர், தூத்துக்குடி மாவட்டங்களில் கடல் அரிப்பு ஏற்பட, அதிக வாய்ப்பிருப்பது தெரிய வந்துள்ளது. எனவே, கடல் அரிப்பை தடுப்பதற்கான நடவடிக்கைகள் துவங்கப்பட்டுள்ளன.

இதுகுறித்து, வனம் மற்றும் சுற்றுச்சூழல் துறை உயரதிகாரி ஒருவர் கூறியதாவது:

கடலூர், தூத்துக்குடி மாவட்டங்களில் கடல் அரிப்பை தடுக்க, உயிர் கேடயங்கள் ஏற்படுத்த திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக, அலையாத்தி மரங்களை, அதிக அளவில் வளர்க்க, சிறப்பு திட்டம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இதற்கு, 10 கோடி ரூபாய் ஒதுக்க தமிழக அரசு ஒப்புதல் அளித்துள்ளது. இத்திட்டப் பணிகள் விரைவில் துவங்கப்பட உள்ளன.

இவ்வாறு அவர் கூறினார்.

# பணி நியமன ஆணை வழங்கிய அமைச்சர்.



தலைமைச் செயலகத்தில்,தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையத்தின் மூலமாக சுற்றுலாத்துறைக்கு தெரிவு செய்யப்பட்ட 2 சுற்றுலா அலுவலர்கள் 13 உதவி சுற்றுலா அலுவலர்கள் என 15 நபர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கிய சுற்றுலாத்துறை அமைச்சர் ஆர்.ராஜேந்திரன்.இந்நிகழ்வில்,சுற்றுலா பண்பாடு மற்றும் அறநிலையங்கள் துறை அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் டாக்டர் க.மணிவாசன்,சுற்றுலா இயக்குநர்,தமிழ்நாடு சுற்றுலா வளர்ச்சிக் கழக மேலாண்மை இயக்குநர் தா.கிறிஸ்துராஜ் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

# இலக்கை நோக்கி பயணிப்போம் வெற்றி வாகை சூடுவோம்.

## கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர், ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன் அறிக்கை.

கள்ளக்குறிச்சி நவ 26

கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்ட கழக செயலாளர், ரிஷிவந்தியம் சட்டமன்ற உறுப்பினர் வசந்தம் க.கார்த்திகேயன் அறிக்கையில் கூறியிருப்பதாவது.



கள்ளக்குறிச்சி தெற்கு மாவட்டத்திற்குட்பட்ட கழக நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்கள் அனைவருக்கும் அன்பான வணக்கங்கள்.

வரவிருக்கின்ற 2026 சட்டமன்ற தேர்தலில் தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதியார் அவர்களின் தலைமையில் மீண்டும் திராவிட மாடல் அரசு அமைந்திட, கள்ளக் குறிச்சி மாவட்டத்திற் குட்பட்ட 4 சட்டமன்ற தொகுதி களிலும் தி.மு.க. மற்றும் கூட்டணி கட்சி வேட்பாளர்கள் பெற்ற வெற்றியினை தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் தளபதியார் அவர்களின் கரங்களில் ஒப்படைத்திடும் வகையில் கழக நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்கள் பணியாற்றிட வேண்டும்.

அதற்கு அச்சாரமாக, தீவிர வாக்காளர் திருத்தப் பட்டியல் (ஷி.மி.ஸி) பணிகளில் கழகத்தினர் தம்மை முழுநேரமும் ஈடுபடுத்தி, கள்ளக்குறிச்சி மாவட்டத்திற்குட்பட்ட 4 சட்டமன்ற தொகுதிகளுக்குட்பட்ட அனைத்து தகுதியான வாக்காளர்களையும் வாக்காளர் பட்டியலில் இடம்பெற செய்திட வேண்டும்.

மழைக்காலங்களில் ஏற்படும் இயற்கை பேரிடர் குறித்த தகவல்களை உடனடியாக மாவட்ட கழக அலுவலகத்திற்கு தெரியப்படுத்த வேண்டும். மேலும், பேரிடரால் பாதிப்புக் குள்ளாகும் பொது மக்களுக்கு தேவையான உதவிகளை உடனடியாக மேற்கொள்ளும் பணிகளிலும் தங்களை ஈடுபடுத்திக் கொள்ள வேண்டும். மக்கள் பணியே மகேசன் பணி எனும் கோட்பாட்டினை மனதில் ஏந்தி, மக்களின் வாக்குரிமை காக்கும் பணிகள், இயற்கை பேரிடரில் இருந்து மக்களை காக்கும் பணிகள் உள்ளிட்ட பணிகளில் கழக நிர்வாகிகள் மற்றும் கழக தோழர்கள் அனைவரும் தங்களை முழுநேரமும் ஈடுபடுத்தி உழைத்திட வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

மேலும், வரவிருக்கின்ற 2026 சட்டமன்ற தேர்தலுக்கு இன்னும் சில மாதங்களே உள்ள நிலையில், கவனச் சிதறல்கள் ஏதுமின்றி, காலம் பொன் போன்றது என்பதனை மனதில் கொண்டு தேவையற்ற செயல்களுக்கு சமூக வலைத்தளங்களில் நேரத்தினை விரயம் செய்திடாமல், இருக்கின்ற குறுகிய காலத்தில் நமது இலக்கினை நோக்கி உழைப்பினை செலுத்தி, கள்ளக்குறிச்சி மாவட்டத்திற்குட்பட்ட 4 சட்டமன்ற தொகுதி களிலும் மகத்தான வெற்றி பெற வேண்டும் என்ற ஒற்றை இலக்கோடு மக்கள் பணியாற்றிட வேண்டுமாய் அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்.

# அனந்தபுரம் அரசு மேல்நிலைப் பள்ளியில் அறிவியல் கண்காட்சி




விழுப்புரம் நவ :26

விழுப்புரம் மாவட்டம் அனந்தபுரம் அரசு மேல்நிலைப் பள்ளியில் அறிவியல் கண்காட்சி நடைபெற்றது.

அனந்தபுரம் அரசு மேல்நிலைப்பள்ளி மற்றும் இந்திய எழுத்தறிவு திட்டம் சார்பில் நடைபெற்ற அறிவியல் கண்காட்சியை தலைமை ஆசிரியர் ஆனந்தன் தலைமை தாங்கி துவக்கி வைத்தார். பட்டதாரி அறிவியல் ஆசிரியர் தாட்சாயினி அனைவரையும் வரவேற்றார்.

உதவி தலைமை ஆசிரியர்கள் மகாதேவன் முருகன் வாஞ்சிநாதன் முன்னிலை வகித்தனர். இந்திய எழுத்தறிவு திட்ட ஒருங்கிணைப்பாளர்கள் ரமேஷ் சுகன்யா கலந்து கொண்டனர். இந்நிகழ்ச்சியில் மாணவர்கள் தயார் செய்த பல்வேறு அறிவியல் சாதன பொருட்கள் மூலம் செயல்முறைகளை விளக்கினர் இதில் மாணவர்கள் தண்ணீர் சுத்திகரிப்பு இயந்திரம், அறிவியலுக்கு முன்பும் அறிவியலுக்குப் பின்பும் வாழ்வியல் பற்றி விளக்கும் விதமாக காட்சி படுத்தி விளக்கினர். மற்றும் ராக்கெட் காற்றாலை மின்சாரம் நெட்டையால் செய்யப்பட்ட வீடுகள் போக்குவரத்து சிக்னல் என பல்வேறு பொருட்கள் காட்சிப்படுத்தினர்.

இதில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு முதல் மூன்று பரிசுகள் மற்றும் ஆறுதல் பரிசுகள் வழங்கப்பட்டது .இந்த கண்காட்சியை பள்ளி மாணவர்கள் பெற்றோர்கள் ஆசிரியர்கள் கண்டு களித்தனர் .

நிகழ்ச்சியை கணித ஆசிரியர் முருகன் ஒருங்கிணைத்தார் ஆசிரியர் பாலு நன்றியுரை வழங்கினார்.

# சேலம் மாநகரைஅச்சுறுத்தும் முகமூடி கொள்ளையர்கள்.

சேலம், நவ. 26–

சேலத்தில் விலையுயர்ந்த இருசக்கர வாகனத்தை திருடிச் செல்லும் முகமூடி கொள்ளையர்களின் சிசிடிவி காட்சி வெளியாகி அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.



ஜாகிர் ரெட்டிப்பட்டி நகரில், கடந்த சில நாட்களுக்கு முன்பு இரவு நேரங்களில் முகமூடி அணிந்த 4 பேர் கொண்ட கும்பல் வீடுகளை நோட்டமிட்டுச் செல்லும் சிசிடிவி காட்சி வெளியாகி பரபரப்பை ஏற்படுத்தியது. இந்த நிலையில், ஜாகிர் ரெட்டிப்பட்டி பகுதியை சேர்ந்த சந்தோஷ் என்பவரது வீட்டின் கதவை உடைத்து, விலையுயர்ந்த இருசக்கர வாகனத்தை முகமூடி கொள்ளையர்கள் திருடிச் சென்றதன் சிசிடிவி காட்சி வெளியானது.



நீதிகதிர் காலை நாளிதழ் எக்ஸ்பிரஸ்

ஈரோடு மாவட்டத்திற்கு வருகை தரும் தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு. மு.க.ஸ்டாலின் வருகை மற்றும் 26.11.2025

# திராவிட மாடல் ஆட்சியின் நான்காண்டு சாதனை சிறப்பு மலர்



# கிளாம்பாடி பேரூராட்சி

## ஈரோடு மாவட்டம்



தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு. மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் பொற்கால ஆட்சியில்

நான்கு ஆண்டுகளில் கிளாம்பாடி பேரூராட்சியின் சாதனைகள்

2025-2026 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப்பணிகள் விவரம்

| வ. எண் | | திட்டத்தின் பெயர் மற்றும் பணிகளின் விபரம் | பணிகளின் எண்ணிக்கை | மதிப்பீடு இலட்சத்தில் |
|---|---|---|---|---|
| 1 | 2025–2026 | நகர்புற சாலை மேம்பாட்டு திட்டம் State Finance Commission Urban Road Development Fund (SFC-URDF) 2025-2026 | 1 | 69.00 |
| 2 | 2025–2026 | பொதுநிதி வேலைகள் | 2 | 12.40 |
| 3 | 2025–2026 | 15 வது நிதிக்குழு மான்யம் | 6 | 53.80 |
| 4 | 2025–2026 | சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாடு திட்டம் | 1 | 2.70 |
| 5 | 2025–2026 | பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சி திட்டம் | 1 | 4.50 |
| | | மொத்தம் | 11 | 142.40 |

அரசுக்கு செலுத்த வேண்டிய வரியினங்களை குறித்த காலத்திற்குள் செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ளவும்

திருமதி.மு.அமுதாள் தலைவர் கிளாம்பாடி பேரூராட்சி

திரு.எஸ்.சொக்கலிங்கம் துணைத் தலைவர் கிளாம்பாடி பேரூராட்சி

திரு.என்.அருண்குமார் செயல் அலுவலர் கிளாம்பாடி பேரூராட்சி

மற்றும் வார்டு உறுப்பினர்கள் கிளாம்பாடி பேரூராட்சி ஈரோடு மாவட்டம்

# வெங்கம்பூர் பேரூராட்சி

## ஈரோடு மாவட்டம்



தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு. மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் பொற்கால ஆட்சியில்

நான்கு ஆண்டுகளில் வெங்கம்பூர் பேரூராட்சியின் சாதனைகள்

2025-2026 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப்பணிகள் விவரம்

| வ. எண் | திட்டத்தின் பெயர் | பணிகளின் எண்ணிக்கை | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | சிறப்பு நிதி | 1 | 84.00 |
| 2 | அயோத்தியதாஸ் பண்டிதர் மேம்பாட்டு திட்டம் | 1 | 80.00 |
| 3 | தமிழ்நாடு நகர்புற சாலைகள் உட்கட்டமைப்பு திட்டம் (TURIP) | 1 | 71.50 |
| 4 | 15வது நிதிக்குழு மான்யம் | 6 | 54.40 |
| | மொத்தம் | 9 | 289.90 |

அரசுக்கு செலுத்த வேண்டிய வரியினங்களை குறித்த காலத்திற்குள் செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ளவும்

திருமதி.த.தனலட்சுமி தலைவர் வெங்கம்பூர் பேரூராட்சி

திருமதி.தி.நிலாச்செல்வி துணைத் தலைவர் வெங்கம்பூர் பேரூராட்சி

திரு.க.செல்வகுமார் செயல் அலுவலர் வெங்கம்பூர் பேரூராட்சி

மற்றும் வார்டு உறுப்பினர்கள் வெங்கம்பூர் பேரூராட்சி ஈரோடு மாவட்டம்

# ஊஞ்சலூர் பேரூராட்சி

## ஈரோடு மாவட்டம்





தமிழ்நாடு முதலமைச்சர் மாண்புமிகு. மு.க.ஸ்டாலின் அவர்களின் திராவிட மாடல் பொற்கால ஆட்சியில்

நான்கு ஆண்டுகளில் ஊஞ்சலூர் பேரூராட்சியின் சாதனைகள்

2025-2026 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப்பணிகள் விவரம்

| வ.எண் | நிதி ஆண்டு | மேற்கொள்ளப்பட்ட திட்டப்பணிகளின் விபரம் | பணிகளின் எண்ணிக்கை | மதிப்பீடு (ரூ.லட்சத்தில்) |
|---|---|---|---|---|
| 1 | 2020 - 2021 | 15வது நிதிக்குழு மான்யம் | 1 | 5.00 |
| 2 | 2021 - 2022 | மூலதன மான்ய நிதி | 1 | 50.00 |
| 3 | 2021 - 2022 | 15வது நிதிக்குழு மான்யம் | 6 | 12.70 |
| 4 | 2021 - 2022 | இயக்கம் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி | 2 | 23.00 |
| 5 | 2022 - 2023 | மொடக்குறிச்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் | 1 | 11.00 |
| 6 | 2022 - 2023 | 15வது நிதிக்குழு மான்யம் இரண்டாம் தவணைத் தொகை (டைய்டு மான்யம்) | 3 | 6.65 |
| 7 | 2023 - 2024 | கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் ( KNMT) | 2 | 10.04 |
| 8 | 2021 - 2022 | நமக்கு நாமே திட்டம் | 1 | 1.50 |
| 9 | 2022 - 2023 | நமக்கு நாமே திட்டம் | 1 | 1.50 |
| 10 | 2023-2024 | இயக்கம் பராமரிப்பு இடைவெளி நிரம்பும் நிதி | 1 | 27.30 |
| 11 | 2023 -2024 | அயோத்திதாஸ் பணிடிதர் குடியிருப்பு மேம்பாடுத் திட்டம் | 3 | 51.50 |
| 12 | 2022 -2023 | 15வது நிதிக்குழு மான்யம் | 3 | 8.50 |
| 13 | 2023 -2024 | ஒருங்கிணைந்த குழந்தைகள் வளர்ச்சி திட்டம் | 3 | 5.25 |
| 14 | 2022 -2023 | 15வது நிதிக்குழு மான்யம் | 3 | 8.20 |
| 15 | 2022–2023 மற்றும் 2023–2024 | ஆறாவது நிதிக்குழு மான்யம் | 3 | 42.70 |
| 16 | 2023 - 2024 | மொடக்குறிச்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் | 1 | 10.00 |
| 17 | 2023 -2024 | 15வது நிதிக்குழு மான்யம் | 3 | 10.50 |
| 18 | 2023 - 2024 | நமக்கு நாமே திட்டம் | 3 | 6.75 |
| 19 | 2024 - 2025 | தூய்மை இந்தியா திட்டம் 2.0 | 6 | 46.74 |
| 20 | 2024 -2025 | 15வது நிதிக்குழு மான்யம் | 3 | 9.50 |
| 21 | 2024 - 2025 | மொடக்குறிச்சி தொகுதி சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு திட்டம் | 1 | 16.50 |
| 22 | 2024 -2025 | 15வது நிதிக்குழு மான்யம் | 4 | 9.35 |
| 23 | 2025 - 2026 | மாநில நிதி ஆணையம் | 1 | 35.00 |
| 24 | 2025 - 2026 | சிறப்பு நிதி | 1 | 53.00 |
| 25 | 2025 - 2026 | இயக்கம் பராமரிப்பு இடைவெளி நிரப்பும் நிதி | 1 | 43.00 |
| 26 | 2025 – 2026 | பள்ளி மேம்பாட்டு மான்யம் | 1 | 32.00 |
| 27 | 2025 -2026 | 15வது நிதிக்குழு மான்யம் | 6 | 18.66 |
| 28 | 2025 – 2026 | பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சி திட்டம் | 1 | 4.50 |
| | | மொத்தம் | 66 | 560.34 |

மரம் வளர்ப்போம், மழை பெறுவோம், மழை நீரை சேகரிப்போம், திறந்த வெளியில் மலம், ஜலம் கழிக்காதீர்கள், குப்பைகளை தெருவிலோ, வடிகாலிலோ கொட்டாதீர்கள், பேரூராட்சி குப்பை வாகனத்தில் குப்பைகளை கொடுக்கவும்

திருமதி.ர.சசிகலா தலைவர், ஊஞ்சலூர் பேரூராட்சி

திரு.க.சரவணன் துணைத்தலைவர், ஊஞ்சலூர் பேரூராட்சி

திரு.எல்.பிரேம்நாத் செயல் அலுவலர் (பொ), ஊஞ்சலூர் பேரூராட்சி

ஊஞ்சலூர் பேரூராட்சி, ஈரோடு மாவட்டம்

வார்டு உறுப்பினர்கள் :

திருமதி.ச.பிரேமாதேவி 1 வது வார்டு

திருமதி.ஜெ.சபினா 2 வது வார்டு

திருமதி.அ.கலா 4 வது வார்டு

திரு.ஜெ.சதீஷ்குமார் 6 வது வார்டு

திரு.யு.கே.பி.மணிகண்டன் 7 வது வார்டு

திருமதி.ரா.கோமதி 8 வது வார்டு

திரு.கு.பிரகாஷ் 9 வது வார்டு

திரு.க.கார்த்திகேயன் 10 வது வார்டு

திரு.வெ.ரங்கராஜ் 11 வது வார்டு

திருமதி.எம்.வாலண்டினா 12 வது வார்டு




## பாரதிய ஜனதா கட்சி தொழில்துறை வல்லுனர் பிரிவு மாவட்ட நிர்வாகிகள் நியமனம்.

திருச்சி, நவ.26–

திருச்சி புறநகர் மாவட்ட தொழில்துறை வல்லுநர் பிரிவு மாவட்ட நிர்வாகிகள் நியமனம்.



பாரதிய ஜனதா கட்சியின் மாநில தலைவர் நைனார் நாகேந்திரன் அவர்களின் வழிகாட்டுதலின் படியும் மாநில அமைப்பு பொதுச்செயலாளர் கேசவ விநாயகம் அவர்களின் ஆலோசனையின் படியும் மாநில பொதுச் செயலாளர் கருப்பு முருகானந்தம் வழிகாட்டுதலின்படியும் மாநில அமைப்பாளர் சுந்தர் ராமன் ஒப்புதலோடு திருச்சி புறநகர் மாவட்ட பார்வையாளர் லோகிதாசன் அவர்களின் ஆலோசனையின் படி திருச்சி புறநகர் மாவட்ட மையக் குழுவின் ஒப்புதலுடன் மற்றும் நடராஜன் அமைப்பாளர் அவர்களின் ஒப்புதலுடன்

திருச்சி மாவட்டம் மணப்பாறை தெற்கு ஒன்றிய மாவட்டத் துணை அமைப்பாளராக வழக்கறிஞர் கோபாலகிருஷ்ணன் அவர்களை பாரதிய ஜனதா கட்சி சார்பில் நியமனம் செய்யப்பட்டுள்ளார்.

## திண்டுக்கல் மாவட்டத்தில் வாக்காளர் பட்டியல் சிறப்பு தீவிர திருத்த பணிகளுக்கான கணக்கெடுப்பு படிவம் 04.11.2025 முதல் 04.12.2025 வரையில் வீடு வீடாக வாக்காளர்களுக்கு வழங்கப்பட்டு மீளப்பெறுவது குறித்து மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் செ.சரவணன் தகவல்

திண்டுக்கல, நவ. 26–

தமிழ்நாட்டில் வாக்காளர் பட்டியல் திருத்தம் தொடர்பாக சிறப்பு தீவிர திருத்தம்2026 நடைபெற்று வருகின்றது. அதன்படி திண்டுக்கல் மாவட்டத்தில் உள்ள 7 சட்டமன்ற தொகுதிகளில் அமைந்துள்ள 2124 வாக்குச்சாவடி மையங்களில் உள்ள வாக்காளர்களின் வீடுகளுக்கு நேரடியாக சென்று கணக்கெடுப்பு படிவங்களை (Enumeration Form) கடந்த 04.11.2025 முதல் 96% வழங்கப்பட்டுள்ளது. தற்பொழுது அப்படிவங்களை பூர்த்தி செய்து மீளப்பெறும் பணிகள் 04.12.2025 வரை தொடர்ந்து நடைபெற்று வருகின்றது. இப்பணியில் சட்டமன்ற தொகுதிகளின் வாக்காளர் பதிவு அலுவலர்கள், உதவி வாக்காளர் பதிவு அலுவலர்கள் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களின் மேற்பார்வையாளர்கள், தேர்தல் பிரிவு பணியாளர்கள் அனைவரும் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர். மேலும், மாவட்டத்தில் சிறப்பு தீவிர திருத்தம் குறித்து வாக்காளர்களிடம் விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் (SVEEP) கலை நிகழ்ச்சிகள் மற்றும் விழிப்புணர்வு பேரணிகள் தொடர்ந்து நடத்தப்பட்டு வருகின்றது.

இந்நிலையில், 24.11.2025 மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மாவட்ட தேர்தல் அலுவலர் மற்றும் மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்கள் 132திண்டுக்கல் சட்டமன்ற தொகுதிக்குட்பட்ட திண்டுக்கல் மாநகராட்சி அலுவலக பாகங்களில் உள்ள வாக்குச்சாவடி நிலை அலுவலர்கள் மற்றும் வாக்குச்சாவடி நிலை அலுவலர்களின் மேற்பார்வையாளர்களுக்கு கணக்கெடுப்பு படிவங்கள் பூர்த்தி செய்வது மற்றும் கணினி பதிவேற்றம் செய்வதை மேம்படுத்துவது குறித்து ஆலோசனை கூட்டம் நடத்தப்பட்டது.



தமிழ்நாடு சட்டமன்றப்பேரவை பொதுக் கணக்குக் குழுத் தலைவர் ஸ்ரீ பெரும்புதூர் சட்டமன்ற உறுப்பின் செல்வபெருந்தகை , சேலம் மாவட்டம் மூக்கனேரியில்மேற்கொள்ளப்பட்டு வரும் புனரமைப்பு பணிகளை ஆய்வு மேற்கொண்டார். உடன் தமிழ்நாடு சட்டமன்ற பேரவை பொதுக்கணக்கு குழு உறுப்பினர் அப்துல் சமது (மணப்பாறை சட்டமன்ற உறுப்பினர்), முதன்மைச் செயலாளர் முனைவர்சீனிவாசன், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர்இரா. பிருந்தாதேவி, சேலம் மாநகராட்சி மேயர்இராமச்சந்திரன், சேலம் மாநகராட்சிணையாளர் டாக்டர்இளங்கோவன, மாநகராட்சி தணை மேயர் சாரதாதேவி, மாமன்ற உறுப்பினர் உமாராணி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.



பாராளுமன்ற மாநிலங்களவை உறுப்பினர் மற்றும் நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கி தலைவர் கே.ஆர். என். இராஜேஸ்குமார், நாமக்கல் மாவட்ட ஆட்சியர்அலுவலகத்தில் ஊராட்சி ஒன்றியங்களில் நேரடி நியமனம் மூலம் பணிநியமனம் பெற்றவர்களுக்கு ஆணையினை வழங்கினார். உடன் மாவட்ட ஆட்சித்தலைவர் துர்காமூர்த்தி உட்பட பலர் உள்ளனர்.

## நவ.26ல் அரசு அலுவலகங்கள், பள்ளி, கல்லூரிகளில் அரசமைப்புச் சட்ட முகப்புரையை வாசிக்க முதல்வர் உத்தரவு

இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின்76ஆம் ஆண்டினையொட்டி இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முகப்புரையை வாசிக்கவும், பள்ளி மற்றும் கல்லூரிகளில் பல்வேறு போட்டிகளை நடத்திடவும் முதல்வர் ஸ்டாலின் உத்தரவிட்டுள்ளார். இது குறித்து தமிழக அரசு சார்பில் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், “மக்களாட்சித் தத்துவத்தின் மாண்பினை உள்ளடக்கி இந்தியத் திருநாட்டினை வளமான பாதையில் முன்னெடுத்து செல்லும் ஓர் உன்னத உருவாக்கம், அண்ணல் அம்பேத்கர் வடிவமைத்துத் தந்த நமது அரசியலமைப்புச் சட்டமாகும்.

தமிழ்நாடு அரசு, இந்திய அரசியலமைப்பின் அடிப்படைக் கொள்கைகளைப் போற்றிப் பாதுகாத்து, சமூக நீதி, சமநிலை மற்றும் மக்கள் நலனிற்காக அயராது பாடுபட்டு வருகிறது. தமிழ்நாட்டு மக்களின் அடிப்படை உரிமைகளைப் பாதுகாப்பதும், ஒற்றுமை மற்றும் ஒருமைப்பாடு, சகோதரத்துவம் மற்றும் பொதுநலத்தை உறுதிப்படுத்துவதும், தமிழ்நாடு அரசின் தலையாய நோக்கம் ஆகும்.

கூட்டாட்சிக் கோட்பாடுகளுக்குட்பட்டு, மாநில சுயாட்சியே தமிழ்நாட்டின் நிலைப்பாடாகும். தமிழ்நாடு அரசு, அரசியலமைப்பின் அடிப்படைக் கொள்கைகளைப் பின்பற்றி மாநிலத்தின் வளர்ச்சி நோக்கி தொடர்ந்து செயல்படும் அரசாக இயங்கி வருகிறது.

பெண்கள் மற்றும் குழந்தைகளின் சமத்துவத்தை மேம்படுத்துவதற்கான சிறப்பு வழிவகைகளை உருவாக்க மாநில அரசிற்கு அதிகாரம் அளிக்கும் அரசியலமைப்பின் 15(3)வது பிரிவின் முக்கியத்துவத்தை முழுமையாக உணர்ந்தமையால், தனது செயல்பாடுகளில், விடியல் பயணம், புதுமைப்பெண் திட்டம், கலைஞர் மகளிர் உரிமை திட்டம் போன்ற பல்வேறு திட்டங்களை வகுத்து சிறப்பான முறையில் அவற்றை செயல்படுத்தி, அரசியலமைப்பின்படி மகளிர் மற்றும் சிறார்களின் அடிப்படை உரிமைகளை மேலோங்க செய்வதில் இவ்வரசு பெருமை கொள்கிறது.

இந்திய அரசியலமைப்பு சட்டத்தின் 76வது ஆண்டினை சிறப்பாகக் கொண்டாடும் வகையில் வரும் 26.11.2025 நாளன்று காலை 11 மணிக்கு தலைமைச் செயலகத்திலுள்ள அனைத்துத் துறைகளிலும், உயர் நீதிமன்றம் மற்றும் மாவட்ட ஆட்சியர் அலுவலகங்கள் உள்ளிட்ட அனைத்துத் துறை தலைமை அலுவலகங்கள், அனைத்து சார்நிலை அரசு அலுவலகங்கள், மாநில அரசின் அனைத்து அலுவலகங்கள், தன்னாட்சி அதிகார அமைப்புகள், நிறுவனங்கள், தன்னாட்சி அரசு நிறுவனங்கள், அனைத்துப் பள்ளிகள் மற்றும் கல்லூரிகளிலும் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் முகப்புரையை வாசிக்க முதல்வர் ஸ்டாலின் உத்தரவிட்டு, அதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது.

மேலும், பள்ளி மற்றும் கல்லூரிகளிலும் இந்திய அரசியலமைப்புச் சட்டத்தின் அடிப்படைக் கோட்டுபாடுகள் மற்றும் அரசியலமைப்பு நெறிமுறைகள் பற்றிய பேச்சுப் போட்டிகள்/ கருத்தரங்குகள்/ வினாடி வினா நிகழ்ச்சிகளை நடத்தவும் அரசு ஏற்பாடு செய்துள்ளது. இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## புட்டபர்த்தி சாய்பாபா நூற்றாண்டு விழா படத் தொகுப்பு வெளியீடு...!



வந்தவாசி, நவ 26:

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி அடுத்த தெள்ளார் இராஜா நந்திவர்மன் கலைக் கல்லூரியில் புட்டபர்த்தி சாய்பாபா நூற்றாண்டு பிறந்தநாள் விழா தொகுப்புப்படம் வெளியிடப்பட்டது.

இந்த நிகழ்ச்சியில் சாய்பாபாவின் ஆன்மீக பெருமைகளையும், சமூக செயல்பாடுகள் பற்றியும் கருத்துரைகள் வழங்கப்பட்டது. அவருடைய படத்தொகுப்பை புதுவை தமிழ்ச் சங்க தலைவர் கலைமாமணி முனைவர் வி.முத்து வெளியிட, ஸ்ரீ கிருஷ்ணா கல்வி மைய முதல்வர் பா.சீனிவாசன் பெற்றுக் கொண்டார். மேலும் கல்லூரி பொருளாளர் எஸ். பழனிச்சாமி, இயக்குனர்கள் டிகேஜி. ஆனந்தன், டிடிகே. ராதா, எஸ்.அப்பாண்டைராஜ், சங்கரன், பா.சுரேஷ், சிவ பொன்முடி, வெள்ளிமேடு பேட்டை மருத்துவர் மௌ.சத்திய சொருபன், சின்ன நெற்குணம் தன்மேந்திரா ரெட்டியார், திரைப்பட துணை இயக்குநர் முகமது ஜியா உள்ளிட்டோர் பங்கேற்றனர். கல்லூரி முதல்வர் முனைவர் இரா.ஏழுமலை நன்றி கூறினார்.

## கணவர் வேண்டாம், காதலன்தான் வேண்டும்: சேலம் ஓமலூரில் அடம் பிடிக்கும் பிரியா.

சேலம்:நவ.26–

சேலம் மாவட்டம் ஓமலூர் அனைத்து மகளிர் போலீஸ் ஸ்டேஷனுக்கு காதல் ஜோடி ஒன்று பதற்றத்துடன் வந்துள்ளனர்.. தாங்கள் இருவரும் காதலித்து திருமணம் செய்துகொண்டதால், இரு குடும்பத்தினாராலும் தங்களுக்கு ஆபத்து உள்ளதாகவும், எனவே பாதுகாப்பு தருமாறும் போலீசாரிடம் கேட்டுக் கொண்டனர்.

இதுகுறித்து போலீசார் விசாரித்தபோது அந்த பெண்ணின் பெயர் பிரிய, காதலர் பெயர் ஹரிகிருஷ்ணன் என்பது தெரியவந்தது.. அவர்களிடம் விசாரணை மேற்கொண்டிருந்தபோதே, அந்த பெண்ணின் பெற்றோர் தரப்பிலும், அந்த இளைஞர் தரப்பிலும் திரண்டு ஸ்டேஷனுக்கு வந்துவிட்டார்கள்..

அதில் ஒருவர் போலீசாரிடம், நான்தான் அந்த பெண்ணின் தாலி கட்டிய கணவர் என்று கூறினார்.. இதைக்கேட்டு அதிர்ச்சி அடைந்த போலீசார், அவர்களிடம் விசாரணை மேற்கொண்டனர். அப்போதுதான், இந்த சம்பவத்தின் உண்மை வெளியே வந்தது.

அதாவது, 4 வருடங்களுக்கு முன்பு ராமு என்பவரை காதலித்து திருமணம் செய்துள்ளார் பிரியா.. இப்போது ராமுவுக்கு 30 வயதாகிறது.. ஓமலூர் அருகே கொங்குபட்டி பகுதியை சேர்ந்தவர்தான் இவரது.. சின்ன திருப்பதியில் துணிக்கடை வைத்திருக்கிறார்.. இந்த தம்பதிக்கு குழந்தைகள் இல்லை..

தன்னுடைய கணவர் துணிக்கடை வைத்திருந்தும்கூட, மற்றொரு துணிக்கடையில் வேலைக்கு சென்றுள்ளர்



இளம்பெண்.. அபபோது சிமெண்டு விற்பனை கடையில் வேலை பார்க்கும் 25 வயது நபர் ஹரிஷ்குமாருடன் தொடர்பு ஏற்பட்டு, அது கள்ளக்காதலாக மலர்ந்துள்ளது.

ஒருகட்டத்தில் கள்ளக்காதலர் ஹரிஷ்குமாரை திருமணம் செய்து கொள்ள முடிவெடுத்த பிரியா, கடந்த வாரம் விட்டு வெளியேறியிருக்கிறார். கள்ளக்காதலனை ஊட்டிக்கு அழைத்து சென்று, கோவிலில் தாலியும் கட்டிக் கொண்டுள்ளார். பிறகு, கணவர் தங்களை பிரித்துவிடுவாரோ என்று பயந்து கொண்டு, போலீசில் தஞ்சம் அடைந்தது விசாரணையில் தெரியவந்தது.

இதையடுத்து போலீசார் கணவருடன் சென்று குடும்பம் நடத்துமாறு அறிவுறுத்தினர்கள்.. ஆனால், பிரியா, கள்ளக்காதலனுடன் தான் செல்வேன் என்று பிடிவாதம் பிடித்தார்.. கணவரை விவாகரத்து செய்யாமல், இப்படி திருமணம்செய்வது தவறு என்று என்று போலீசார் அறிவுறுத்தியதுடன், பெற்றோருடன் செல்லுங்கள் என்று கூறினார்கள்..

இதனால் என்ன செய்வதென்று தெரியாமல், பெற்றோருடன் செல்ல விருப்பமின்றி சம்மதித்தார் பிரியா. பெற்றோருடன் பிரியாவை போலீசார் அனுப்பி வைத்தனர். இந்த சம்பவம் ஓமலூர் ஸ்டேஷனில் பரபரப்பை தந்துவிட்டது

முன்னதாக, போலீசில் பிரியா தாலி கட்டி கொண்டு நிற்பதை பார்த்ததுமே, அதிர்ச்சியடைந்த ராமுவும், அவரது உறவினர்கள், பிரியாவை தாக்க முயன்றனர். ஆனால் அவர்களை மகளிர் போலீசார் தடுத்து வெளியேற்றினர். ஆனால், வெளியில் நின்று கொண்டிருந்த ஹரிஷ்குமாரை வீட்டாரை சரமாரியாக தாக்கினார்கள்..

போலீசார் பிரியாவிடம் தனிப்பட்ட விசாரணை நடத்தினார்கள்.. அப்போது, “திருமணமாகி 3 வருடங்களாக கணவர் ராமு, என்னுடன் குடும்பம் நடத்தவில்லை. அதனால், எனது வாழ்க்கையை நானே தேர்வு செய்து கொண்டேன். என்னை காதல் கணவர் ஹரிஷ்குமாருடன் அனுப்பி வைக்க வேண்டும்“ என்று தெரிவித்தார்.

மற்றொருபக்கம் கணவர் ராமு தன்னுடன் மனைவியை அனுப்புங்கள் என்று போலீசாரிடம் கேட்டுக் கொண்டார்.. இவர்களிடம் போலீசார் நீண்ட நேரமாக பேச்சுவார்த்தை நடத்தியிருக்கிறார்கள்.. அதற்கு பிறகுதான், பெற்றோருடன் செல்கிறேன் என்று அரைமனதுடன் சொல்லி உள்ளார் பிரியா.

Published by **K.SABIULLA**,printed by **K.SABIULLA,** on behalf of **K.SABIULLA,** printed at **BEAUTIFUL** printers 6/1 devaraja Street,Triplicane chennai 600005.
puplished at 378/46.10th cross,Rajevnagar,manaparai trichy(dis) editor:**K.SABIULLA**, cell.78100-68421

# வெள்ளோட்டாம்பரப்பு (முதல்நிலை) பேரூராட்சி
## ஈரோடு மாவட்டம்



தமிழ்நாடு முதலமைச்சர்
மாண்புமிகு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின்
திராவிட மாடல்
**பொற்கால ஆட்சியில்**

நான்கு ஆண்டுகளில் வெள்ளோட்டாம்பரப்பு (முதல்நிலை) பேரூராட்சியின் சாதனைகள்

**2025-2026 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப்பணிகள் விவரம்**

| வ எண். | திட்டப்பணிகளின் விபரம் | பணிகளின் எண்ணிக்கை | மதிப்பீடு (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1 | மூலதன மானிய நிதி 2024–2025 | 1 | 113.00 |
| 2 | நபார்டு நிதி உதவி திட்டம் (RIDF-XXX) 2024-2025 | 1 | 114.00 |
| 3 | பள்ளி மேம்பாட்டு மானியம் 2024-2025 | 1 | 27.00 |
| 4 | 15வது நிதிக்குழு மான்யம் (டைய்டு மான்யம்) முதல் தவணை – 2024-2025 | 1 | 17.00 |
| 5 | 15வது நிதிக்குழு மான்யம் அன்டைய்டு மான்யம் முதல் தவணை – 2024-2025 | 1 | 13.00 |
| 6 | சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2024-2025 | 1 | 2.50 |
| 7 | பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சித்திட்டம் – 2024–2025 | 1 | 6.00 |
| 8 | 15வது நிதிக்குழு மான்யம் (டைய்டு மான்யம்) இரண்டாம் தவணை – 2024-2025 | 2 | 14.00 |
| 9 | 15வது நிதிக்குழு மான்யம் அன்டைய்டு மான்யம் இரண்டாம் தவணை – 2024-2025 | 1 | 9.50 |
| 10 | பள்ளி மேம்பாட்டு மானியம் 2025-2026 | 1 | 32.00 |
| 11 | சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் 2025-2026 | 2 | 20.50 |
| 12 | 15வது நிதிக்குழு மான்யம் (டைய்டு மான்யம்) முதல் தவணை – 2025-2026 | 2 | 13.80 |
| 13 | 15வது நிதிக்குழு மான்யம் அன்டைய்டு மான்யம் முதல் தவணை – 2025-2026 | 1 | 13.00 |
| 14 | 15வது நிதிக்குழு மான்யம் (டைய்டு மான்யம்) இரண்டாம் தவணை – 2025-2026 | 2 | 13.80 |
| 15 | 15வது நிதிக்குழு மான்யம் அன்டைய்டு மான்யம் இரண்டாம் தவணை – 2025-2026 | 1 | 12.00 |
| 16 | பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சித்திட்டம் – 2025-2026 | 1 | 18.00 |
| | மொத்தம் | 20 | 439.10 |

அரசுக்கு செலுத்த வேண்டிய வரியினங்களை குறித்த காலத்திற்குள் செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ளவும்

**திருமதி.ச.சத்யா சண்முகம்**
தலைவர்,
வெள்ளோட்டாம்பரப்பு பேரூராட்சி

**திரு.எஸ்.ஜெயச்சந்திரன்**
துணைத்தலைவர்
வெள்ளோட்டாம்பரப்பு பேரூராட்சி

**திரு.த.ராமசந்திரன்**
செயல் அலுவலர்,
வெள்ளோட்டாம்பரப்பு பேரூராட்சி

மற்றும் வார்டு உறுப்பினர்கள், வெள்ளோட்டாம்பரப்பு (முதல்நிலை) பேரூராட்சி, ஈரோடு மாவட்டம்


# திருவள்ளூர் மாவட்டத்தில் "முதலமைச்சரின் தாயுமானவர் "திட்டத்தின் கீழ் பயன்பெற்ற முதியவர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் ஆகியோர் தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு தங்களது நெஞ்சார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொண்டனர்



தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் சென்னை, தண்டையார்பேட்டை, கோபால் நகரில் 12.08.2025 அன்று தமிழ்நாட்டிலுள்ள வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத்திறனாளி குடும்ப அட்டைதாரர்களின் இல்லத்திற்கே சென்று அரிசி, சர்க்கரை உள்ளிட்ட ரேசன் பொருட்களை விநியோகம் செய்யும் ”முதலமைச்சரின் தாயுமானவர் திட்டத்தை” பயனாளிகளுக்கு ரேசன் பொருட்களை வழங்கி தொடங்கி வைத்து, தாயுமானவர் திட்ட வாகனங்களின் சேவைகளையும் கொடியசைத்து தொடங்கி வைத்தார்.

மக்கள் நலன்சார்ந்த இத்திட்டம் சிறப்புக் கவனம் தேவைப்படும் பிரிவினரின் வாழ்வை மேம்படுத்துவதுடன் உணவுப் பாதுகாப்பையும் உறுதி செய்யும். இத்திட்டத்தின் வாயிலாக 34,809 நியாயவிலைக் கடைகளைச் சேர்ந்த 70 வயதிற்கு மேற்பட்ட மூத்த குடிமக்களைக் கொண்ட 15,81,364 குடும்ப அட்டைகளில் உள்ள 20,42,657 பயனாளர்களும், 91,969 குடும்ப அட்டைகளில் உள்ள 1,27,797 மாற்றுத் தினாளிகளும், என மொத்தம் 16,73,333 குடும்ப அட்டைகளில் உள்ள 21,70,454 பயனாளர்களுக்கு அவர்தம் இல்லங்களுக்கே சென்று குடிமைப் பொருட்களை விநியோகம் செய்ய வழிவகை செய்யப்பட் டுள்ளது.

திருவள்ளூர் மாவட்டத்தில், திருவேற்காடு நகராட்சி வடக்கு மாடவீதி, கூட்டுறவு நியாய விலைக்கடை பகுதியில் 12.08.2025 அன்று இத்திட்டத்தை சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர், மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப், தலைமையில் தொடங்கி வைத்து, வயது முதிர்ந்தோர் மற்றும் மாற்றுத் திறனாளிகளின் வீடுகளுக்கேநேரில்சென்றுகுடிமைப் பொருட்களை வழங்கினார்



திருவள் ளூர் மாவட்டத் தில் இதுவரைஇத்திட்டத்தின் வாயிலாக மொத்தம் 51,543 குடும்ப அட்டை தாரர்களில் 65 வயது கடந்த மூத்த குடிமக்கள் மற்றும் மாற் றுத் தினாளி கள் ஆக மொத்தம் 61,541 குடும்ப அட்டை தாரர்கள் “முதலமைச்சரின் தாயுமானவர் ”திட்டத்தில் பயன்பெற்று வருகிறனர். ”முதலமைச்சரின் தாயுமானவர் “திட்டத்தில் பயனடைந்த திருவள்ளூர் மாவட்டம் ஈக்காடு மேட்டு தெரு எண்.424 பகுதியை சேர்ந்த



ஒசன்னா குளோர என்பவர் தெரிவித்ததாவது : என்னையும் என் கணவரையும் போன்ற வயது முதிர்ந்தவர் கள் நியாய விலை கடைகளில் நேரடியாக சென்று நீண்ட வரிசைகளில் நின்று பொருட்களை பெற்று வீடுகளுக்கு எடுத்துச் செல்வது என்பது மிகுந்த சவாலான ஒரு செயலாகும் இதனை நிவர்த்தி செய்யும் விதமாக நியாய விலை பொருட்களை எங்களது வீட்டின் அருகிலேயே எடுத்து வந்து விநியோகிக் கும் திட்டத் தினை செயல் படுத்த ஆணையிட்ட தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டா லின் அவர் களுக்கு எங்களை போன்றவர் கள் மிகுந்த நன்றி உணர்வுடன் மனம் நிறைந்து நெஞ்சார்ந்த நன்றியினை தெரிவித்துக் கொள்கிறேன் என்கிறார்.



அதே போல் முதலமைச் சரின் தாயு மானவர்“ திட்டத்தில் பயனடைந்த திருவள்ளூர் மாவட்டம் ஈக்காடு மசூதி தெரு எண்.810 தினகரன் என்பவர் கூறுகையில், எனது மகன் போன்ற மாற்றுத்திறனாளி குழந்தைகளை வைத்துள்ள பெற்றோர்கள் நியாய விலை கடைகளில் நேரடியாக சென்று நீண்ட வரிசைகளில் நின்று பொருட்களை பெற்று வீடுகளுக்கு எடுத்துச் செல்வது என்பது மிகுந்த சவாலான ஒரு செயலாகும் இதனை நிவர்த்தி செய்யும் விதமாக நியாய விலை பொருட்களை எங்களது வீட்டின் அருகிலேயே எடுத்து வந்து விநியோகிக்கும் திட்டத்தினை செயல்படுத்த ஆணையிட்ட தமிழ்நாடு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களுக்கு மிகுந்த நன்றி உணர்வுடன் மனம் மார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்

தொகுப்பு :
பி.அஸ்வின் குமார்
திருவள்ளூர் மாவட்ட செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்



03.12.2026 அன்று நடைபெறவுள்ள உலக மாற்றுத்திறனாளி தின விழாவை முன்னிட்டு தஞ்சாவூர் அரசு பார்வைத்திறன் குறையுடையோர் மற்றும் செவித்திறன் குறைபாடைய மேல்நிலைப்பள்ளி மாணவ, மாணவிகளுக்கு விமானத்தில் சென்னை செல்லும் அனுபவம் ஏற்படுத்தும் வகையில் மாவட் ஆட்சித்தலைவர் சரவணன் திருச்சிராப்பள்ளி விமான நிலையம் வருகை தந்த மாற்றுத்திறனாளி மாணவ, மாணவிகளை வரவேற்று அவர்களுடன் கலந்துரையாடி வழியனுப்பி வைத்தார். இந்நிகழ்வில் மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர்கள் அருள் பிரகாசம், இரா. ரவிச்சந்திரன், மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# வந்தவாசியில் சிறப்பு வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகள்: மாவட்ட ஆட்சியர் ஆய்வு.



வந்தவாசி , நவ 26:

திருவண்ணாமலை மாவட்டம், வந்தவாசி வட்டாட்சியர் அலுவலகத்தில் சிறப்பு வாக்காளர் பட்டியல் திருத்தப் பணிகள் நடைபெற்று வருகிறது. இந்த பணிகளை மாவட்ட ஆட்சியர் க.தர்ப்பகராஜ் நேரில் பார்வையிட்டு ஆய்வு மேற்கொண்டார். மேலும் ஆன்லைனில் பதிவேற்றம் செய்யும் பணிகளை விரைவில் முடிக்குமாறு அலுவலர்களுக்கு ஆலோசனைகளை வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் பிற்படுத்தப்பட்டோர் மற்றும் சிறுபான்மையினர் நல அலுவலர் டி.செல்வம், வட்டாட்சியர் எஸ்.சம்பத் குமார், நகராட்சி ஆணையர் சோனியா உள்ளிட்ட அரசு அலுவலர்கள் பலரும் பங்கேற்றனர். இந்த ஆய்வின் போது அங்கு வரையப்பட்ட விழிப்புணர்வு ரங்கோலி கோலத்தையும் மாவட்ட ஆட்சியர் பார்வையிட்டார்.

# சுந்தரசோழபுரத்தில் 1,12,294 பயனாளிகளுக்கு ரூ.1000.34 கோடி மதிப்பீட்டிலான அரசு நலத்திட்ட உதவிகள்
# நான்கரை வருடத்தில் 20 லட்சம் பேருக்கு வீட்டுமனைப் பட்டாக்களை அரசு வழங்கி இருக்கிறது
## தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின்



திருவள்ளூர் நவ 26 : திருவள்ளூர் மாவட்டம் திருவேற்காடு நகராட்சி சுந்தரசோழபுரத்தில் நடைபெற்ற அரசு விழாவில் ரூ.137.38 கோடி மதிப்பீட்டில் 211 புதிய திட்டப்பணிகளுக்கு அடிக்கல் நாட்டி, 1,12,294 பயனாளிகளுக்கு ரூ.1000.34 கோடி மதிப்பீட்டிலான அரசு நலத்திட்ட உதவிகளை தமிழ்நாடு துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் வழங்கி பேசினார்.

இந்த நிகழ்ச்சியில் மட்டும் சுமார் 37 ஆயிரம் பேருக்கு வீட்டுமனை பட்டாக்களை கொடுக்க இருக்கின்றோம். இது மிகப் பெரிய ஒரு சாதனை, மகிழ்ச்சியான தருணம். இப்படி இந்த நான்கரை வருடத்தில் மட்டும் தமிழ்நாடு முழுவதும் சுமார் 20 லட்சம் பேருக்கு வீட்டுமனைப் பட்டாக் களை நம்முடைய அரசு வழங்கி இருக்கின்றது. இது மிகப் பெரிய ஒரு சாதனை. பட்டா என்பது இந்த அரசு உங்களுக்கு தருகின்ற ஒரு சலுகை கிடையாது. அது உங்களுடைய உரிமை. உங்களுடைய சொந்த இடத்தில், சொந்த வீட்டில் நீங்கள் மகிழ்ச்சியாக, நிம்மதியாக தூங்கலாம்.

வீடற்ற மக்களுக்கு வீடு கொடுக்க வேண்டும் என்பதுதான், கலைஞர் கொண்டுவந்த திட்டம், குடிசை வீடுகளை கான்கிரீட் வீடுகளாக மாற்றுகின்ற அந்த திட்டம். அப்படிப்பட்ட நம்முடைய கலைஞர் பெயரிலேயே, இந்தத் திட்டத்தின் மூலம் வீடு கட்டுவதற்கான ஆணைகளை இன்றைக்கு சுமார் 4 ஆயிரம் பயனாளிகளுக்கு கொடுக்க இருக்கின்றோம்.

விளையாட்டுத்துறை சார்பாக திருவள்ளூர் மாவட்டத்தின் பொன்னேரி, பூந்தமல்லி, மற்றும் கும்மிடிப்பூண்டி தொகுதிகளில் தலா 3 கோடி ரூபாய் மதிப்பிலான Mini Stadium அமைக்க அடிக்கல் நாட்டி இருக்கின்றோம். இந்த மினி ஸ்டேடியங்கள் விரைவில் கட்டிமுடிக்கப்படும். அதை இந்த மாவட்ட விளையாட்டு வீரர்கள் சிறப்பாக பயன்படுத்திக் கொள்ள வேண்டும். இது தவிர, இன்றைக்கு இங்கே 50 ஆயிரம் மகளிர் சுய உதவிக் குழு சகோதரி களுக்கு அடையாள அட்டையும் கொடுக்க இருக்கின்றோம். மகளிர் சுய உதவிக் குழுக்களைச் சேர்ந்த அத்தனை சகோதரிகளுக்கும், அவர்கள் புகைப்படத்துடன் சேர்ந்து அடையாள அட்டை கொடுக்கப் பட்டிருக் கிறது. அந்த அடையாள அட்டை மூலமாக அவர்களுக்கு பல்வேறு பயன்கள் கிடைக்கும்.

அது மட்டுமல்ல, வருகின்ற டிசம்பர் 15 ஆம் தேதி அனைத்து மகளிருக்கும் மாதம் ரூ.1,000 மகளிர் உரிமைத் தொகை திட்டம் நிச்சயம் வந்து சேரும். இப்படி பெண்கள், திருநர்கள், மாற்றுத்திறனாளிகள், ஏழை எளிய ஒடுக்கப்பட்ட மக்கள் என்று அனைத்து தரப்பு மக்களின் முன்னேற்றத் திற்காகவும் நம்முடைய திராவிட மாடல் அரசு செயல்பட்டுக் கொண்டிருக்கிறது என்று கூறினார்.

இதில் சிறுபான்மையினர் நலன் மற்றும் வெளிநாடு வாழ் தமிழர் நலத்துறை அமைச்சர் சா.மு.நாசர், நாடாளுமன்ற உறுப்பினர் ச.சசிகாந்த் செந்தில், சட்டமன்ற உறுப்பினர்கள் ஆ.கிருஷ்ண சாமி, எஸ்.சுதர்சனம், வி.ஜி.இரா ஜேந்திரன், எஸ்.சந்திரன், டி.ஜே.கோவிந்த ராஜன்,க.கணபதி, துரை சந்திரசேகர், மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப், ஆவடி மாநகராட்சி மேயர் கு.உதயகுமார், திருவேற்காடு நகர்மன்ற தலைவர் என்.இ.கே. மூர்த்தி, ஆவடி மாநகராட்சி ஆணையர் சரண்யா, மாவட்ட வருவாய் அலுவலர் சு.சுரேஷ், சார் ஆட்சியர் ரவிக்குமார், திட்ட இயக்குநர் (மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை) ஜெயக்குமார், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள், அரசு அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

# திராவிட மாடல் அரசு யாருக்கும் எதிரான அரசு அல்ல: அமைச்சர் ரகுபதி பேட்டி

சென்னை: நவ.26–

திராவிட மாடல் அரசு யாருக்கும் எதிரான அரசு அல்ல என்று அமைச்சர் ரகுபதி பேட்டி அளித்துள்ளார். ஒடிசா தேர்தலில் தமிழர்கள் குறித்து பிரதமர் மோடி, அமித்ஷா அவதூறு செய்தனர். இந்தியாவில் தமிழ்நாடு ஏதோ துண்டிக்கப்பட்டது போன்று ஒரு மாயத் தோற்றத்தை ஆளுநர் ஏற்படுத்த நினைக்கிறார். பாஜகவின் ஊதுகுழலாக தமிழ்நாட்டை ஆளுநர் இழிவுபடுத்துவதாக அமைச்சர் ரகுபதி கண்டனம் தெரிவித்துள்ளார்.

# மொடக்குறிச்சி பேரூராட்சி

## ஈரோடு மாவட்டம்



தமிழ்நாடு முதலமைச்சர்

மாண்புமிகு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின்

திராவிட மாடல்

**பொற்கால ஆட்சியில்**

நான்கு ஆண்டுகளில் மொடக்குறிச்சி பேரூராட்சியின் சாதனைகள்

**2025-2026 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப்பணிகள் விவரம்**

| வ.எண் | திட்டத்தின் பெயர் | மதிப்பீடு (இலட்சத்தில்) | பணிகளின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| 1 | நகர்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் | 157.00 | 1 |
| 2 | சிறப்பு நிதி திட்டம் | 144.00 | 2 |
| 3 | மூலதன மான்ய நிதித்திட்டம் | 103.06 | 2 |
| 4 | 15வது நிதிக்குழு மான்யம் | 65.25 | 6 |
| 5 | பொது நிதி திட்டம் | 4.85 | 2 |
| 6 | பாராளுமன்ற உறுப்பினர் உள்ளூர் வளர்ச்சித் திட்டம் | 3.30 | 1 |
| 7 | சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டுத் திட்டம் | 28.30 | 3 |
| 8 | இயக்கம் மற்றும் பராமரிப்பு நிதி மான்யம் | 36.00 | 1 |
| 9 | பள்ளி மேம்பாட்டு மான்யம் | 40.00 | 1 |
| | மொத்தம் | 581.76 | 19 |

**அரசுக்கு செலுத்த வேண்டிய வரியினங்களை குறித்த காலத்திற்குள் செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ளவும்**



திருமதி.ச.செல்வாம்பாள் சரவணன்
தலைவர்
மொடக்குறிச்சி பேரூராட்சி

திரு.ச.கார்த்திகேயன்
துணைத் தலைவர்
மொடக்குறிச்சி பேரூராட்சி

திரு.எம்.ஏ.ஹர்ஷத்
செயல்அலுவலர்
மொடக்குறிச்சி பேரூராட்சி

மற்றும் வார்டு உறுப்பினர்கள்,
மொடக்குறிச்சி பேரூராட்சி, ஈரோடு மாட்டம்.

# நசியனூர் பேரூராட்சி

## ஈரோடு மாவட்டம்



தமிழ்நாடு முதலமைச்சர்

மாண்புமிகு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின்

திராவிட மாடல்

**பொற்கால ஆட்சியில்**

நான்கு ஆண்டுகளில் நசியனூர் பேரூராட்சியின் சாதனைகள்

**2025-2026 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப்பணிகள் விவரம்**

| வ.எண். | திட்டத்தின் பெயர் | எண்ணிக்கை | மதிப்பீடு (ரூ. லட்சத்தில்) |
|---|---|---|---|
| 1) | கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டுத் திட்டம் 2025-2026 | 1 | 1650.00 |
| 2) | சிறப்பு நிதித்திட்டம் 2025-2026 | 1 | 46.00 |
| 3) | 15வது நிதிக்குழு மானியம் Tied 2025-2026 | 3 | 34.00 |
| 4) | 15வது நிதிக்குழு மானியம் Un Tied 2025-2026 | 2 | 25.50 |
| 5) | சட்டமன்ற உறுப்பினர் தொகுதி மேம்பாட்டு நிதி - 2025-2026 | 1 | 10.00 |
| | மொத்தம் | 8 | 1765.50 |

**அரசுக்கு செலுத்த வேண்டிய வரியினங்களை குறித்த காலத்திற்குள் செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ளவும்**

திரு.பெ.மோகனப்பிரியா
தலைவர்
நசியனூர் பேரூராட்சி

திருமதி.உ.மீரா மைதீன்
செயல் அலுவலர்
நசியனூர் பேரூராட்சி

# பாசூர் பேரூராட்சி, ஈரோடு மாவட்டம்



தமிழ்நாடு முதலமைச்சர்

மாண்புமிகு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின்

திராவிட மாடல்

**பொற்கால ஆட்சியில்**

நான்கு ஆண்டுகளில் பாசூர் பேரூராட்சியின் சாதனைகள்

**2025-2026 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப்பணிகள் விவரம்**

| வ.எண் | திட்டப்பணிகள் விபரம் | பணிகளின் எண்ணிக்கை | மதிப்பீடு ரூ.இலட்சத்தில் |
|---|---|---|---|
| 1 | 2022 – 2023 ஆம் ஆண்டு கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் | 1 | 47.96 |
| 2 | 2022–23 ஆம் ஆண்டு மாநில நிதி ஆணைய மான்யம் | 1 | 99.00 |
| 3 | 2022–23 ஆம் ஆண்டு திடக்கழிவு மேலாண்மை திட்டம் 2.0 | 1 | 13.50 |
| 4 | 2023 – 2024 ஆம் ஆண்டு 15வது நிதிக்குழு மான்யத்திட்டம் (டையிடு முதல் தவணைத் தொகை) | 4 | 13.30 |
| 5 | 2023 – 2024 ஆம் ஆண்டு 15வது நிதிக்குழு மான்யத்திட்டம் (அன்டையிடு முதல் தவணைத் தொகை) | 2 | 8.28 |
| 6 | 2023 – 2024 ஆம் ஆண்டு மூலதன நிதி | 1 | 12.00 |
| 7 | 2023 – 2024 ஆம் ஆண்டு பொதுநிதி | 3 | 5.70 |
| 8 | 2023 – 2024 ஆம் ஆண்டு நமக்கு நாமே திட்டம் | 1 | 0.80 |
| 9 | 2022–23 மற்றும் 2023–2024–ஆம் ஆண்டு பள்ளி மேம்பாட்டு மானியம் | 2 | 40.30 |
| 10 | 2024 – 2025 ஆம் ஆண்டு கலைஞர் நகர்ப்புற மேம்பாட்டு திட்டம் | 1 | 49.00 |
| 11 | 2024 – 2025 ஆம் ஆண்டு நகர்ப்புற சாலைகள் மேம்பாட்டு திட்டம் | 1 | 9.00 |
| 12 | 2024–2025–ஆம் ஆண்டு பள்ளி மேம்பாட்டு மானியம் | 1 | 11.50 |
| 13 | 2024–2025–ஆம் ஆண்டு நமக்கு நாமே திட்டம் | 1 | 1.92 |
| 14 | 2024 – 2025 ஆம் ஆண்டு 15வது நிதிக்குழு மான்யத்திட்டம் (டையிடு முதல் தவணைத் தொகை) | 1 | 7.05 |
| 15 | 2024 – 2025 ஆம் ஆண்டு 15வது நிதிக்குழு மான்யத்திட்டம் (அன்டையிடு முதல் தவணைத் தொகை) | 1 | 7.40 |
| 16 | 2024 – 2025 ஆம் ஆண்டு 15வது நிதிக்குழு மான்யத்திட்டம் (அன்டையிடு 2வது தவணைத் தொகை) | 1 | 4.75 |
| 17 | 2024 – 2025 ஆம் ஆண்டு 15வது நிதிக்குழு மான்யத்திட்டம் (டையிடு 2வது தவணைத் தொகை) | 1 | 7.10 |
| 18 | 2025 – 2026 ஆம் ஆண்டு பொதுநிதி | 1 | 1.10 |
| 19 | 2025–26 ஆம் ஆண்டு மாநில நிதி ஆணைய மான்யம் | 1 | 45.00 |

**அரசுக்கு செலுத்த வேண்டிய வரியினங்களை குறித்த காலத்திற்குள் செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ளவும்**

திருமதி.சி.பழனியம்மாள்
தலைவர், பாசூர் பேரூராட்சி

திரு.சு.ராமமூர்த்தி
துணைத்தலைவர்

திரு.எல்.பிரேம்நாத்
செயல் அலுவலர்,
பாசூர் பேரூராட்சி

மற்றும் வார்டு உறுப்பினர்கள், பாசூர் பேரூராட்சி, ஈரோடு மாவட்டம்

# அரச்சலூர் பேரூராட்சி

## ஈரோடு மாவட்டம்



தமிழ்நாடு முதலமைச்சர்

மாண்புமிகு. **மு.க.ஸ்டாலின்** அவர்களின்

திராவிட மாடல்

**பொற்கால ஆட்சியில்**

நான்கு ஆண்டுகளில் அரச்சலூர் பேரூராட்சியின் சாதனைகள்

**2025-2026 ஆம் ஆண்டில் மேற்கொள்ளப்பட்டு வரும் திட்டப்பணிகள் விவரம்**

| வ. எண் | திட்டத்தின் பெயர் | பணிகளின் எண்ணிக்கை | மதிப்பீடு ரூ. (இலட்சத்தில்) |
|---|---|---|---|
| 1. | மூலதன மானிய நிதி 2022-2023 | 1 | 99.00 |
| 2. | 15வது நிதி ஆணைய சுகாதார மானியம் திட்டம் 2025-2026 | 1 | 45.00 |
| 3. | கலைஞர் நகர்புற மேம்பாட்டு திட்டம் 2025-2026 | 1 | 48.00 |
| 4. | சிறப்பு நிதி 2025-2026 | 1 | 42.00 |
| 5. | 15வது நிதிக்குழு டைய்டு மான்யம் 2025-2026 முதல் தவணைத் தொகை | 2 | 26.60 |
| 6. | 15வது நிதிக்குழு அடிப்படை மான்யம் 2025-2026 முதல் தவணைத் தொகை | 1 | 17.70 |
| 7. | 15வது நிதிக்குழு டைய்டு மான்யம் 2025-2026 முதல் தவணைத் தொகை | 3 | 30.90 |
| 8. | 15வது நிதிக்குழு அடிப்படை மான்யம் 2025-2026 முதல் தவணைத் தொகை | 1 | 19.00 |
| | | 11 | 328.20 |

**அரசுக்கு செலுத்த வேண்டிய வரியினங்களை குறித்த காலத்திற்குள் செலுத்தி ரசீது பெற்றுக்கொள்ளவும்**

திரு.ரா.விஜயக்குமார்
தலைவர்
அரச்சலூர் பேரூராட்சி

திரு.கே.மணிகண்டன்
செயல்அலுவலர்
அரச்சலூர் பேரூராட்சி

# திருப்பூரில் மருத்துவர் மீது அவதூறு பரப்பி தானமாக வழங்கிய நிலத்தை அபகரிக்க முயற்சி செய்து வரும் நபர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்

## பாதிக்கப்பட்ட மருத்துவர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் புகார் மனு!!



திருப்பூர் நவ26

திருப்பூர் அவிநாசி சாலை பகுதியைச் சேர்ந்தவர். செந்தில்குமார்,சங்கீதா தம்பதியினர் இவர்கள் இருவரும் மருத்துவராக இருந்து வருகின்றனர். இவர்களுக்கு அவிநாசி சாலையில் தீபா மருத்துவமனை மற்றும் ஆதார் அறக்கட்டளை என்ற பெயரில் மருத்துவர்களை இணைத்து அறக்கட்டளைகளை நிறுவி கடந்த 20 ஆண்டுகளாக மருத்துவ சேவை செய்து வருகின்றார்.

இந்நிலையில் திருப்பூர் ஆசாத் வீதியை சேர்ந்த ராஜேந்திரன் என்பவர் குடும்பத்துடன் செந்தில்குமார், சங்கீதா தம்பதியினர் மருத்துவ மனைக்கு சென்று சிகிச்சை பெற்று வந்த பொழுது ராஜேந்திரன் செந்தில் குமார் மற்றும் சங்கீதா தம்பதியினரை அணுகி தனது மகள் சுகந்தி பெயரில் இலவசமாக மருத்துவ சேவை துவங்க வேண்டும் இதற்கு தனக்கு சொந்தமான நிலம் திருப்பூர் ஆசாத் வீதியில் உள்ளது என்றும் அந்த நிலத்தில் தாங்கள் நடத்தி வரும் அறக்கட்டளையுடன் இணைந்து மருத்துவ மனையை நடத்த விருப்பம் உள்ளதாக கூறினார்.

அதன்படி மேற்படி இடத்தில் ஆதார் இண்டெகரேட்டட் மெடிக்கல் அண்ட் சோசியல் சர்வீஸ் என்ற புதிய மருத்துவமனை கட்டப்பட்டது.

இதனை நிர்வகிக்க ராஜேந்திரனை அறங்காவலராக இணைத்துள்ளனர்.

மேலும் சுகந்தி மெடிக்கல் சென்டர் மருத்துவமனை தொடங்கப்பட்டு பலர் சிகிச்சை பெற்று வந்த நிலையில் தற்போது ராஜேந்திரன் மற்றும் சிலர் தானமாக கொடுத்த நிலத்தை தாங்கள் ஏமாற்றி பெற்றதாக வழக்கு தொடர்ந்துள்ளனர்.

மேலும் தானமாக கொடுத்த நிலத்தை சிலர் இதுகுறித்து சமூக வலைதளங்களில் அவதூறு பரப்பி வருவதாகவும் அவதூறு பரப்புபவர்கள் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும் என மருத்துவர் செந்தில்குமார் மற்றும் சங்கீதா மற்றும் மருத்துவ குழுவினர் மாவட்ட ஆட்சியரை சந்தித்து மனு கொடுத்தனர்.

# திருப்பூர் மாவட்ட காவல்துறையினால் மீட்கப்பட்ட 74 கைப்பேசிகள் உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.



திருப்பூர் நவ26

திருப்பூர் மாவட்ட காவல் கண்காணிப்பாளர் யாதவ் கிரிஷ் அசோக் தலைமையில் திருப்பூர் மாவட்ட காவல் துறை யினால் மீட்கப்பட்ட கைப்பேசிகள் உரிய உரிமையாளர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

திருப்பூர் மாவட்டம் முழுவதும் பொது மக்களிடமிருந்து பெறப்பட்ட தொலைந்த மனுக்கள் மற்றும் புகார்களின் காணாமல் போன கைப்பேசிகள் குறித்த அடிப்படையில், காவல்துறை தொழில் நுட்ப விசாரணை மற்றும் கண்காணிப்பு நடவடிக்கைகளை மேற்கொண்டது.அதன் மூலம் பல கைப்பேசிகள் மீட்கப்பட்டன. அவற்றில்ரூ. 14லட்சம் மதிப்புள்ள கைப்பேசிகள் உரியவர்களிடம் ஒப்படைக்கப்பட்டது.

இந்நிகழ்ச்சியிகாவல் கண்காணிப்பாளர் கைப்பேசி காணாமல் போனால், உடனடியாக பொதுமக்கள் CEIR (Central Equipment Identity Register) போர்ட்டலில் https://ceir.sancharsaathi.gov.inஎன்ற முகவரியில் அல்லது அருகிலுள்ள காவல் நிலையத்தில் புகார் அளிக்க வேண்டும். இது கைப் பேசியை விரைவாக கண்டறிய மிகுந்த உதவியாக இருக்கும்" என்று அறிவுரை வழங்கினார்.

# நின்றிருந்த லாரியின் பின்பக்கமாக காற்றாலை எஸ்காார்ட் வாகனம் மோதி விபத்து.




திண்டுக்கல் நவம்பர் 26

சிவகாசியில்இருந்துஒருகண்டெய்னர் லாரியில் பட்டாசுகளை ஏற்றி கொண்டு மும்பையை நோக்கி சென்று கொண்டிருந்த லாரியை ஈரோடு அருகே உள்ள சூரம்பட்டி வலசை சேர்ந்த சந்திரசேகரன் வயது 53 என்பவர் ஓட்டி சென்றார். லாரியை வேடசந்தூர் அருகே உள்ள அய்யர் மடத்தில் டீ சாப்பிடுவதற்காக சாலை ஓரத்தில் நிறுத்திவிட்டு டிரைவர் சென்று விட்டார். அப்பொழுது திண்டுக்கல் கரூர் ரோட்டில் உத்தரப்பிரதேசம் மாநிலத்தை சேர்ந்த ஆதர்ஷ்(25) என்பவர் ஓட்டி வந்த காற்றாலை எஸ்கார்ட் வாகனம் நின்று இருந்த லாரியின் பின்பக்கமாக மோதி உள்ளே நுழைந்தது. இதில் எஸ்கார்ட் வாகனத்தின் ஒரு பகுதி அப்பளமாக நொறுங்கியது. அதிர்ஷ்டவசமாக டிரைவர் காயம் இன்றி தப்பினார். தகவல் அறிந்த நெடுஞ்சாலை ரோந்து சிறப்பு சார்பு ஆய்வாளர்கள் கன்னிமுத்து, பழனிசெல்வம், தலைமை காவலர் ராஜேந்திரன் ஆகியோர் இடிபாடுகளில் சிக்கிய வாகனத்தை மீட்டு போக்குவரத்தை சீர் செய்தனர். திண்டுக்கல் கரூர் செல்லும் சாலைகள் இவ்வாறான விபத்துக்கள் அதிக வண்ணம் ஏற்பட்டு வருகின்றன போக்குவரத்து அதிகம் உண்டான சாலையில் சுங்கச்சாவடியினர் அதற்கு உண்டான ஒளிரும் விளக்குகளையும் விபத்து நடக்கும் இடங்களை கண்டறிந்து விபத்து நடக்கா வண்ணம் தேவையான வசதிகளை செய்து தர வேண்டும் என்று சமூக ஆர்வலர்களும் வாகன ஓட்டிகளும் கோரிக்கை வைத்துள்ளனர்.

# அரசிடம் கூடுதலாக ரூ.105 கோடி கேட்டுள்ளோம்: தாட்கோ விளக்கம்

சென்னை : 'நவ.26–

கூடுதல் நிதி கிடைத்தால், 'சி.எம்., அரைஸ்' திட்டத்தின் கீழ் விண்ணப்பித்துள்ள அனைவருக்கும், மானியத்துடன் கடன் வழங்கப்படும்' என, தாட்கோ தெரிவித்துள்ளது.

'சி.எம்., அரைஸ் திட்டத்தின் கீழ், பயனாளிகளுக்கு மானியம் வழங்க நிதி இல்லை' எனக்கூறி, விண்ணப்பங்களை, தாட்கோ அதிகாரிகள் நிராகரித்து வருகின்றனர்.

இதுகுறித்து, நம் நாளிதழில், நேற்று முன்தினம் செய்தி வெளியானது.

இதுதொடர்பாக, தாட்கோ உதவி இயக்குநர் சிவகுரு அளித்துள்ள விளக்கம்:

நடப்பு நிதியாண்டில், முதல்வரின் தொழில் முனைவோர் திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட, 75 கோடி ரூபாய் நிதி, 3,915 பயனாளிகளுக்கு மானியமாக விடுவிக்கப்பட்டு உள்ளது. கடந்த இரண்டு ஆண்டுகளில், இத்திட்டத்தின் கீழ் 4,687 பயனாளிகளுக்கு, 90 கோடி ரூபாய் மானியம் வழங்கப்பட்டுள்ளது. அவர்கள் தற்போது சுய தொழில் செய்து வருகின்றனர்.

மேலும், 5,466 விண்ணப்பதாரர்கள் விண்ணப்பித்து, வங்கி ஒப்புதலுக்காக காத்திருக்கின்றனர். நடப்பு நிதியாண்டில், இத்திட்டத்திற்கு ஒதுக்கப்பட்ட நிதி முழுமையாக செலவிடப் பட்டுள்ளது.

அரசிடம் கூடுதலாக, 105.10 கோடி ரூபாய் நிதி கேட்டு, கடந்த, 11ம் தேதி கருத்துரு அனுப்பி உள்ளோம். நிதி கிடைத்தால், விண்ணப்பித்துள்ள அனைவருக்கும் மானியத்துடன் கூடிய கடன் வழங்கப்படும். இவ்வாறு அவர் விளக்கம் அளித்துள்ளார்.

# தேனியில் சிறிய நீர் மின் நிலையம் அமைக்க தனியாருக்கு அனுமதி

சென்னை: நவ.26–

தமிழகத்தில் முதல் முறையாக தனியார் சார்பில், தேனியில், 10 மெகாவாட் திறனில், சிறிய நீர் மின் நிலையம் அமைக்கப்பட உள்ளது.

தமிழகத்தில், நீர் மின் நிலையங்களை, மின் வாரியம் மட்டுமே அமைத்துள்ளது.

இதில், தனியார் நிறுவனங்களின் பங்களிப்பை ஊக்குவிக்க, 2024 இறுதியில், சிறிய நீர் மின் கொள்கையை அரசு வெளியிட்டது.

அதன்படி, குறைந்தது, 100 கிலோ வாட் முதல் அதிகபட்சம், 10 மெகா வாட் வரை, மின் நிலையம் அமைக்கலாம்.

அந்த மின்சாரத்தை, பசுமை எரிசக்தி கழகம் வாங்கும். தனியார் இடத்தில் சிறிய நீர் மின் நிலையம் அமைக்க, கடந்த மார்ச் 3ம் தேதி, பசுமை எரிசக்தி கழகம் அழைப்பு விடுத்தது.

இதையடுத்து, தேனி மாவட்டம் கம்பத்தில், 10 மெகாவாட் திறனில், ஐந்து அலகுகளில், சிறிய நீர் மின் உற்பத்தி நிலையம் அமைக்க, பி.பி.என்., நிறுவனம் விருப்பம் தெரிவித்தது.

இதற்கான ஒப்புதல் ஆணையை, கோவையில் இன்று முதல்வர் ஸ்டாலின் முன்னிலையில் நடக்கும் மண்டல முதலீட்டாளர்கள் மாநாட்டில், பசுமை எரிசக்தி கழகம் வழங்க உள்ளது. தனியார் வாயிலாக அமைக்கப்பட உள்ள முதல் நீர் மின் நிலையம் இது.

# காலி மதுபாட்டில் திரும்ப பெறும் திட்டத்தை எதிர்த்து ஆர்ப்பாட்டம்

திருச்சி: நவ.26–

திருச்சியில், காலி மதுபாட்டில்களை திருப்பி கொடுத்து, 10 ரூபாய் பெற்று கொள்ளும் திட்டம், இன்று முதல், அமல்படுத்தப்படுகிறது. இதற்கு எதிர்ப்பு தெரிவித்து, டாஸ்மாக் பணியாளர்கள் ஆர்ப்பாட்டம் நடத்தினர்.

டாஸ்மாக் கடைகளில் விற்பனை செய்யப்படும் மது பாட்டில்களை வாங்கி, மது அருந்திய பின், விளை நிலங்கள், சாலையோரங்களில் வீசி செல்கின்றனர். இதனால், விலங்குகள், மனிதர்கள் பாதிக்கப்படுகின்றனர்.

இதை தவிர்க்கும் வகையில், இன்று முதல், திருச்சி மாவட்ட சில்லரை மதுபானம் விற்பனை கடைகளில், காலி மது பாட்டில்களை திருப்பி கொடுத்தால், 10 ரூபாய் கொடுக்கும் திட்டம் நடைமுறைக்கு வருகிறது, என கலெக்டர் சரவணன் அறிவித்துள்ளார். இந்த திட்டத்தை திருச்சியில் நடைமுறைப்படுத்துவதற்கு, டாஸ்மாக் பணியாளர்கள் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

திருச்சி, டாஸ்மாக் முதுநிலை மண்டல அலுவலகத்தை, நேற்று, டாஸ்மாக் பணியாளர்கள் முற்றுகையிட்டு ஆர்ப்பாட்டம் நடத்தினர். இதில், 500க்கும் மேற்பட்ட பணியாளர்கள், ஆர்ப்பாட்டத்தில் பங்கேற்றனர்.

பணியாளர் கூட்டமைப்பின் ஒருங்கிணைப்பாளர் முருகானந்தம் கூறியதாவது: டாஸ்மாக் கடைகளில் பணியாளர்கள் பற்றாக்குறை காரணமாக, வேலை பளு அதிகம் இருப்பதால், காலி பாட்டில்களை திரும்ப பெற முடியாது. தனியார் நிறுவனத்திடம் ஆட்கள் பெற்று, அந்த பணியை செய்ய வேண்டும். இவ்வாறு அவர் கூறினார்.

# ஆம்பூர் அருகே 3 மாத பெண் குழந்தை சடலமாக மீட்பு!

திருப்பத்தூர்: நவ. 26–

ஆம்பூர் அருகே பெத்தலேகம் பகுதியில் 3 மாத பெண் குழந்தை சடலமாக மீட்கப்பட்டது. காணாமல் போனதாக கூறப்பட்ட பெண் குழந்தை மூடப்பட்டிருந்த தொட்டியில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளது.மூடப்பட்ட தொட்டியில் குழந்தை எப்படி விழுந்தது என பெற்றோரிடம் போலீசார் விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

# எஸ்.ஐ.ஆர் (SSR) பணிக்கு எதிர்ப்பு தெரிவித்து 3 லட்சம் பேர் கையெழுத்து: தேர்தல் ஆணையத்திற்கு அனுப்பி வைப்பு




புதுச்சேரி, நவ. 216–

புதுச்சேரி காங்கிரஸ் கட்சி, வாக்காளர் பட்டியலில் மேற் கொள்ளப்படும் சிறப்பு திருத்தப் பணிக்கு (SSR - Special Summary Revision) கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளது. இதனை கண்டித்து பொதுமக்களிடம் பெறப்பட்ட சுமார் 3 லட்சம் கையெழுத்துக்கள் தேர்தல் ஆணையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

'எஸ்.ஐ.ஆர்' (SSR) என்ற பெயரில் வாக்காளர் பட்டியலில் திருத்தம் செய்து, பொதுமக்களின் வாக்குகளை பாஜக மறைமுகமாக திருடி வருவதாகவும், இதற்கு தேர்தல் ஆணையம் துணை போவதாகவும் காங்கிரஸ் கட்சி குற்றம் சாட்டியுள்ளது.

கையெழுத்து இயக்கம்: இந்த "வாக்கு திருட்டு" முயற்சியை எதிர்த்து காங்கிரஸ் கட்சி கடந்த சில மாதங்களாக பிரச்சாரம் செய்து, பொதுமக்களிடம் கையெழுத்து சேகரித்தது.

புதுச்சேரி முழுவதும் சுமார் 2 லட்சத்து 90 ஆயிரம் (2.90 லட்சம்) மக்களிடம் கையெழுத்து பெறப்பட்டுள்ளது.

அடுத்த நடவடிக்கை: சேகரிக்கப்பட்ட கையெழுத்து மனுக்கள் அனைத்தும் பார்சல் செய்யப்பட்டு, கூரியர் (Courier) மூலமாக தேர்தல் ஆணையத்திற்கு அனுப்பிவைக்கப்பட்டன.

போராட்டம்: காங்கிரஸ் கட்சி அலுவலக வாயிலில் நிர்வாகிகள் வாக்கு திருட்டுக்கு எதிராகவும், பாஜக அரசை கண்டித்தும் கோஷங்களை எழுப்பினர். இந்நிகழ்வில் காங்கிரஸ் தலைவர் வைத்திலிங்கம் எம்.பி, முன்னாள் முதல்வர் நாராயணசாமி, சட்டமன்ற கட்சித் தலைவர் வைத்தியநாதன், முன்னாள் அரசு கொறடா அனந்தராமன், முன்னாள் எம்.எல்.ஏ கார்த்திகேயன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

# இந்து தர்ம பாதுகாப்பு பேரவையின் மாநில துணைத் தலைவராகப் பொறுப்பேற்பு

## குலதெய்வக் கோயிலில் சிறப்பு வழிபாடு மற்றும் நிதியுதவி!



புதுச்சேரி, நவ. 26–

பாரதப் பிரதமர் திரு. நரேந்திர மோடி ஜி மற்றும் மத்திய உள்துறை அமைச்சர் திரு. அமித் ஷா ஜி அவர்களின் நேரடி மேற்பார்வையில், தேச நலன் மற்றும் ஆன்மீக வளர்ச்சிக்காக இயங்கி வரும் *'இந்து தர்ம பாதுகாப்பு பேரவை'*யின் முக்கியப் பொறுப்பான மாநில துணைத் தலைவராக, திரு. மருதமலையார் (என்கிற) மருதமலை ஏகேஜி சித்தார்த் அபிமன்யு அவர்கள் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஆன்மீகத்திலும், பொது சேவையிலும் மிகுந்த ஈடுபாடு கொண்ட மருதமலை ஏகேஜி சித்தார்த் அபிமன்யு அவர்களுக்கு, இந்து தர்ம பாதுகாப்பு பேரவையில் மாநில அளவிலான இந்தப் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது ஒரு அங்கீகாரமாகப் பார்க்கப்படுகிறது. இந்த நிலையில், தனக்கு வழங்கப்பட்ட இந்தப் புதிய பொறுப்பிற்கு நன்றி தெரிவிக்கும் விதமாகவும், அப்பணியில் சிறப்பாகச் செயல்பட வேண்டியும், அவர் தனது குலதெய்வமான பனையாத்தம்மன் திருக்கோயிலுக்குச் சென்று சிறப்பு சுவாமி தரிசனம் செய்தார். அங்கு இறைவனின் ஆசி வேண்டி பிரார்த்தனை மேற்கொண்டார்.

அதனைத் தொடர்ந்து, கோயிலின் வளர்ச்சியில் பக்திப்பூர்வமாகப் பங்கேற்கும் விதமாக, தற்போது அங்கு நடைபெற்று வரும் கோயில் கட்டு மானப் பணிகளுக்காக ரூ. 5,001/ (ரூபாய் ஐந்தாயிரத்து ஒன்று) நிதியுதவியாக வழங்கினார்.

இந்தப் புதிய நியமனத்தின் மூலம், இந்து தர்மத்தைக் காக்கும் பணிகளிலும், மக்கள் சேவையிலும் அவர் தொடர்ந்து ஈடுபடுவார் என்று எதிர்பார்க்கப் படுகிறது.




தமிழ்நாடு சட்டமன்ற பேரவை பொதுக் கணக்குக் குழுத்தலைவர் \ ஸ்ரீ பெரும்புதூர் சட்டமன்ற உறுப்பினர் செல்வபெருந்தகை பாலின சமத்துவத்திற்கான தேசிய அளவிலான பிரச்சாரத்தினை சேலம் மாவட்ட ஆட்சியரகத்தில் கொடியசைத்து தொடங்கி வைத்தார். உடன் தமிழ்நாடு சட்டமன்ற பேரவை பொதுக் கணக்கு குழு உறுப்பினர்/ சட்டமன்ற உறுப்பினர் அப்துல் சமது, டாக்டர் சரஸ்வதி, முகமது ஷாநவாஸ், முதன்மைச் செயலாளர் முனைவர் சீனிவாசன், மாவட்ட ஆட்சித்தலைவர் டாக்டர் இரா. பிருந்தாதேவி, சேலம் மாநகராட்சி மேயர் இராமச்சந்திரன், மேட்டூர் சட்டமன்ற உறுப்பினர் சதாசிவம், மாவட்ட வருவாய் அலுவலர் இரா. ரவிக்குமார், மாநகராட்சி துணை மேயர் சாரதாதேவி உள்ளிட்ட தொடர்புடைய அலுவலர்கள் உள்ளனர்.


எமது மருதமலை முருகனின் பெருமானின் நல்லாசியுடன்
HDPO
ஹிந்துவே உணர்ந்து எழு
HDPO
ஹிந்துக்களின் பாதுகாவலர், ஹிந்து சாம்ராஜ்யத்தின் முடிசூடா சக்கரவர்த்தி,
உலக அரசியலின் விஷ்வ குரு, நாடு போற்றும் நாயகன்
பாரதப் பிரதமர் மாண்புமிகு
திரு நரேந்திர மோடி ஜி அவர்களின் நல்லாசியுடனும்,
இந்திய அரசியலின் சாணக்கியர், உள்துறை அமைச்சர்
மாண்புமிகு திரு.அமித்ஷா ஜி அவர்களின் நல்லாசியுடனும்,
தமிழக பாஜக தலைவர், சாலச்சிறந்த ஆன்மீகவாதி, பண்ணையார்
திரு.நயினார் நாகேந்திரன் அவர்களின் நல்லாசியுடனும்,
என்னை ஹிந்து தர்ம பாதுகாப்பு பேரவையின் மாநில துணைத் தலைவராக நியமித்து,
தேசப்பணி மற்றும் ஆன்மீக சேவையாற்றிட அரிய வாய்ப்பளித்த
ஹிந்து தர்ம பாதுகாப்பு பேரவையின் நிறுவனர் & தலைவர்,
ஆன்மீகச்செம்மல் மரியாதைக்குரிய
திரு. நா.ஜெகன்நாதன் அவர்களுக்கு
எனது கோடான கோடி நன்றிகளை தெரிவித்துக் கொள்கிறேன்
என்றென்றும் தேசமும் தெய்வீகமும் பாதையில் :
மருதமலையார் (எ) மருதமலை ஏகேஜி சித்தார்த் அபிமன்யு
மாநில துணைத் தலைவர், ஹிந்து தர்ம பாதுகாப்பு பேரவை
செல் : 77089 15659


தேசிய நினைவெழுச்சியுடன்...
NOV 27
மாவீரர் நாள் 2025
த.ஆனந்த்
மாநில அமைப்புக்குழு உறுப்பினர்.
நா.அசோக்
மாவட்ட இளைஞரணி செயலாளர்
தி.கோவிந்தன்
மாவட்ட பொருளாளர்.
நா.இராசநாயகம்
செஞ்சி தொகுதி பொறுப்பாளர்.
ஜெயராமன்
மாவட்ட அவைத்தலைவர்.
சிறுணாம்பூண்டி
G.ராஜா
செஞ்சி ஒன்றிய செயலாளர்.
தமிழக வாழ்வுரிமைக் கட்சி
செஞ்சி சட்டமன்றத் தொகுதி
அமைப்பு : R.சிவா மாவட்ட ஊடகப்பிரிவு செயலாளர்.